பக்கங்கள்: 16
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | ஆவணி 30 | சனிக்கிழமை 15.09.2018 | கதிர் 314

**இனி அது ரகசியம் அல்ல!**

வடக்கு முதல்வர் சி.வீ.விக்னேஸ்வரனுக்கும் அவரது இரண்டு மாகாண அமைச்சர்களுக்கும் எதிராக டெனிஸ்வரன் தாக்கல் செய்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வரும் செவ்வாய்க்கிழமையன்று மீளவும் பக்கம் 03

# சிங்களக் குடியேற்றங்கள் முல்லைத்தீவில் நடக்காது

## ஊடக ஆசிரியர்கள் சந்திப்பில் ஜனாதிபதி உறுதி




கொழும்பு, செப்ரெம்பர் 15

"முல்லைத்தீவு மாவட்டத்தில் சிங்களக் குடியேற்றங்கள் ஒரு போதும் மேற்கொள்ளப்படமாட்டா. அவ்வாறான எந்தொவொரு நடவடிக்கையையும் அரசு மேற்கொள்ளவில்லை. அவ்வாறு சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களையும் நான் அடியோடு மறுக்கிறேன்."

-இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. பக்கம் 14

## சுமந்திரனுக்கு எதிராக நேற்று சுவரொட்டிகள்



முல்லைத்தீவு, செப். 15

முல்லைத்தீவில் நேற்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கு எதிராகச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. பக்கம் 14

## சம்பிக்கவுக்கு பதிலாக சமரசிங்க

கொழும்பு, செப்.15

அரசமைப்புச்சபைக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பிரதிநிதியாகத் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் மஹிந்த சமரசிங் பக்கம் 14

## யாழ்.பல்கலை வளாகத்துக்குள் கைக்குண்டு!



யாழ்ப்பாணம், செப்.15

யாழ்.பல்கலைக்கழக வளாகத்துக்குள் இருந்து பக்கம் 14

## மஹிந்த ஆதரவுக் கட்சியே தேர்தல்களில் வெல்லும்!

### சர்வதேச சஞ்சிகை கருத்து

கொழும்பு, செப்.15

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆதரவுக் கட்சியே இலங்கையில் ஜனாதிபதி பக்கம் 14

## இலங்கைக்கு நிதி வழங்க நிபந்தனை எதுவுமில்லை

### சீன அரசு கூறுகிறது

பீஜிங், செப்.15

இலங்கைக்கு நிதி வழங்கப்படும் போது எவ்வித நிபந் பக்கம் 14

# தவறான புரிதலைத் திருத்தின டில்லியில் நடந்த சந்திப்புகள்

## இந்தியப் பயணம் குறித்து மஹிந்த அறிக்கை



கொழும்பு, செப்.15

தவறான புரிதலை மீள் திருத்தும் வகையில் டில்லிச் சந்திப்புகள் அமைந்தன. அது மாத்திரம் அல்லாது இலங்கை – இந்திய உறவை மேலும் பலப்படுத்துவதற்கான சந்தர்ப்பமாகவும் இந்திய விஜயம் அமைந்தது என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். பக்கம் 14

## நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் கிடையாது

### முப்படைகளும் ஊரார் என்கிறார் மைத்திரிபால

கொழும்பு, செப்.15

தேசியப் பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் ஏற்படவில்லை. இராணுவம் பலமாகவே உள்ளது

## ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தில் ஜனாதிபதி புதிய முன்மொழிவு

கொழும்பு, செப்.15

படையினருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள், அரசியல் கைதிகள் விவகாரம் உள்ளடங்கலாக இலங்கை பக்கம் 14

### அநுராதபுரம் சிறையில்

## தமிழ் அரசியல் கைதிகள் மீண்டும் உண்ணாவிரதம்

கொழும்பு, செப்.15

தமிழ்ப் பிரதிநிதிகள் தங்களைக் கண்டுக்கொள்ளாத நிலையில், தமிழ் அரசியல் கைதிகள் பக்கம் 14

## இராணுவத்தை பாதுகாக்க முயற்சி; மைத்திரி மீது கூட்டமைப்பு விசனம்

கொழும்பு, செப்.15

குற்றப்புலனாய்வுப் பிரிவின் அழைப்பை மீறிப் பாதுகாப்புப் பிரிவின் தலைவர் வெளிநாடு பக்கம் 14

## தமிழருக்கு சமஷ்டி கொடுக்க முடியாது

### டில்லியில் மஹிந்த திட்டவட்டம்

புதுடில்லி, செப்.15

தமிழ் மக்கள் அதிகாரப் பகிர்வைக் கோரவில்லை என்றும், அரசியல்வாதிகள் தான் அதிகாரப் பக்கம் 14

யாழ். மண்ணில் மாருதி Money Exchange
கோலாகலத் திறப்பு விழா

நிகழும் மங்களகரமான விளம்பி வருடம் ஆவணித் திங்கள் 30ஆம் நாள் இன்று (15.09.2018) சனிக்கிழமை காலை 6 மணிமுதல் 8.10 மணி வரையுள்ள அனுச நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுப வேளையில் இலக்கம் 388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் எமது

மாருதி Money Exchange

நிறுவனம் கோலாகலமாகத் திறக்க திருவருள் கைகூடியுள்ளது. அத்தருணம் தாங்கள் வருகை தந்து விழாவினை சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ். மண்ணில் வெளிநாட்டு நாணய மாற்றுச் சேவையை தனித்துவமாகக் கொண்ட ஒரே ஒரு நிறுவனம்.

Head Office: No. 285, Galle Road, Wellawatta, Colombo - 06
T.P. 011 236 2086

நிர்வாகத்தினர்
மாருதி Money Exchange
T.P. 021 221 4433, 076 284 443



காலைக்கதிர் Kalaikkathir



## வட மாகாண மாற்றுத்திறனாளி கலைஞர்களுக்கான சுப்பர் சிங்கர் இறுதிப் போட்டி நாளை

வடமாகாணத்தைச் சேர்ந்த மாற்று வலுவுள்ளோருக்கான சுப்பர் சிங்கர் இறுதிப் போட்டி நாளை 16 ஆம் திகதி வவுனியா கலாசார மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

வடமாகாணத்தில் உள்ள மாற்றுத்தி றனாளிகளது திறன்களை வெளிக் கொணரகளம் அமைக்கும் நோக்குடன் 24.08.2018 அன்று வரோட் என்ற ழைக்கப்படும் மாற்றுவலுவுள்ளோ ருக்கான வலுவூட்டல் அமையம் மற் றும் யாழ். உடுவில் குபேரகா கலை மன்றம் இணைந்து மாற்றுத்திறனா ளிக் கலைஞர்களுக்கான போட்டி நிகழ்வை வரோட் நிறுவன வளாகத்தில் நடத்தியது.

இந் நிகழ்வில் வவுனியா, யாழ்ப் பாணம் மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இருந்து மொத்தமாக 26 பயனாளிகள் பங்குபற்றினர். அன் றைய நாளில் இரண்டு சுற்றுக்கள் இடம் பெற்றன. இச் சுற்றில் பாடல்கள் யாவும் கரோக்கி இசையுடன் இசைக்கப்பட்டு 13 போட்டியாளர்கள் இறுதிச் சுற்றுக்காத் தெரிவு செய்யப்பட்டார்கள்.

இதன் இறுதிச் சுற்றில் வாத்திய கலைஞர்களின் இசையுடன் இணைந்து நேரடியாக பாடல் போட்டிகள் இடம்பெற வுள்ளன. (க- 100)

## தவசிகுளத்தில் விபத்து; இரு இளைஞர் படுகாயம்!

வவுனியா தவசிகுளம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை மோட்டார் சைக்கிள், ஓட்டோ மோதியதில் இரு இளைஞர்கள் படுகாயமடைந்துள்ள னர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ள னர்.

நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் வவுனியா நகருக்கு மதகு வைத்தகுளம் பகுதியிலிருந்து சென்ற ஓட்டோவுடன் வவுனியாவிலிருந்து சென்ற மோட்டார் சைக்கிள் தவசிகுளம் பகுதியில் மோதியுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் சென்ற 21, 22 வயதுடைய மதகுவைத்த குளம் பகுதியைச் சேர்ந்த இரு இளை ஞர்களும் படுகாயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிள் ஓட்டோ என்பன சேதமடைந்துள்ளது டன், மோட்டார் சைக்கிளில் சென்ற இரு இளைஞர்களும் மதுபோதையில் காணப் பட்டுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

இந்த விபத்து தொடர்பான மேல திக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றன.

## அலங்கார மீன் தொழிற்துறைக்கென செயலணி!

அலங்கார மீன் தொழிற்துறைக்காக ஒரு செயலணியை அமைப்பதற்கு நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அலங்கார மீன் ஏற்றுமதியாளர்கள், உணவு உற்பத்தியாளர்கள் மற்றும் நீர் உயிரின அபிவிருத்தி ஆகிய துறைகளில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளுக்கு தீர்வைக் காண்பதில் இந்த செயலணி செயற்படும்.

இதனடிப்படையில் அலங்கார மீன் தொழிற்றுறையைப் பாதிக்கும் பிரச்சி னைகளைப் பற்றி விவாதித்து, தீர்வுகள் மற்றும் முன்மொழிவுகளை வழங்கு தல் போன்ற விடயங்கள் இந்த செயல ணிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த செயலணி கடற்றொழில், நீரி யல் வள அபிவிருத்தி மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் திலிப் வெதஆரச்சியின் ஆலோசனையை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

# பௌத்த தேரருக்கு கடூழியச் சிறைத் தண்டனை பௌத்த மதக் கோட்பாடுகளுக்கு முரணானது!

## பொதுபலசேனா தெரிவிப்பு

கொழும்பு, செப். 15

நீதிமன்றத்திற்கு கல்லெறிந்து சட்டத் துறையை அவமதித்த அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தொடர்பில் இதுவரை யில் அரசோ , நீதித்துறையோ எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வில்லை.

ஆனால், இராணுவத்தினரது உரி மைகளைப் பாதுகாக்க குரல் கொடுத்த பௌத்த தேரருக்கு கடூழிய சிறை தண் டனை வழங்கியுள்ளமையானது, பௌத்த மத கோட்பாடுகளுக்கு முரணான தாகும் எனப் பொதுபல சேனா அமைப் பின் பேச்சாளர் சுதினாநந்த நாயக்க தேரர் தெரிவித்துள்ளார்.

பொதுபலசேனா அமைப்பின் அலுவ லகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவி யலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட் டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரி விக்கையில் –

நீதிமன்றத்தை அவமதித்தார் என்று குற்றம்சாட்டி ஞானசார தேரருக்கு கடூழிய சிறைத்தண்டனை விதித்துள்ளமை யானது சட்டத்தின் பார்வையில் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக காணப்பட்டாலும், பொதுவான விடயங்களின் பார்வையில் முரணானதாகவே காணப்படுகின்றது.

நீதிமன்றத் தை அவமதித்தவர்கள் இன்று அரசின் முக்கிய பொறுப்புக்களில் காணப்படுகின்றனர்.

தேசிய அரசின் நிர்வாகத்தில் பௌத்த மதம் முற்றாக அழியும் நிலையில் காணப்படுகின்றது. சர்வதேசத்தின் சில ஒரு தலைப்பட்சமான நோக்கங்களுக்கு அரசின் முக்கிய தரப்பினர்கள் இன்று முகவர்களாக செயற்படுகின்றனர்.

இதன் ஒரு கட்டமே ஞானசார தேரரின் சிறைவாசம். வடக்கிற்கு ஒரு சட்டவொழுங் கும் தெற்கில் பிறிதொரு சட்டவொழுங்கும் பின்பற்றப்படுகின்றது வேண்டும் அவர் தெரிவித்துள்ளார் .

## பொருளாதாரம் மற்றும் சமூக வாழ்க்கை அபிவிருத்திக்காக விரிவான வேலைத் திட்டம்

பொருளாதாரம் மற்றும் சமூக வாழ்க்கை அபிவிருத்திக் காக விரிவான வேலைத் திட்டம் ஒன்று தென்மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதற்காக தென்மாகாண அபிவிருத்தி அதிகாரசபை முக் கிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவை ஆகிய துறை களில் குறிப்பிட்ட வேலைத்திட்டங்கள் பல வகுக்கப்பட்டு நடை முறைப்படுத்தப்படும் என்று அதிகாரசபையின் தலைவர் குமார கரவிட்ட தெரிவித்தார்.

## சட்டவிரோத மணல் அகழ்வு செய்யும் இடம் சுற்றிவளைப்பு!

கிளிநொச்சி வட்டக்கச்சி பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வுசெய்யும் இடமொன்று நேற்று முன்தினம் இரவு மாவட்ட விசேட பிரிவு பொறுப் பதிகாரி சத்துரங்க தலைமை யிலான குழுவினர் சுற்றி வளைத்தபோது சட்டவிரோ தமாக மண் ஏற்றிக்கொண்டி ருந்த டிப்பர் வாகனம் ஒன் றும் உழவு இயந்திரம் ஒன் றும் பிடிக்கப்பட்டுள்ளன.

சுமார் நானூறு கியூப் மணல் ஆற்றில் இருந்து ஏற்றப்பட்டு இந்த உரிமை யாளர்கள் இல்லாத காணிப் பகுதியில் சட்ட விரோத யாட் அமைத்து வெளிமாவட்டங் களுக்கு விற்பனை செய்து வருவது கண்டுபிடிக்கப்பட் டுள்ளது

இது தொடர்பில் விசேட பிரிவு பொறுப்பதிகாரி சத்து ரங்க கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தமைக்கு அமைவாக இந்தப் பகுதிக்கு விஜயம் செய்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றின் பதிவாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் நிலை மைகளை நேரில் பார்வை யிட்டுள்ளனர்.

## மைத்திரியை சீண்டிய நாமல்




கொழும்பு, செப் 15

ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன வைச்சீண்டும்வகை யில் முன்னாள் ஜனா திபதி மஹிந்தவின் மகனான நாடாளு மன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, தனது 'டுவிட்டர்' பக் கத்தில் படத்துடன் தக வலொன்றை பதிவிட் டுள்ளார். இந்தப் பதி வானது அரசியல் புயலாக உருவெடுத்துள்ளது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானத்தில் தனக்கு வழங் கப்பட்ட கஜு (மரமுந்திரிகை) தொடர்பில் ஜனாதிபதி மைத்தி ரிபால சிறிசேன சர்ச்சைக்குரிய கருத்தை அண்மையில் வெளியிட்டிருந்தார்.

அந்த விமானத்தில் வழங்கப்படும் கஜூவை நாய்கூட சாப்பிடமுடியாது. அந்தளவுக்கு அது மோசமாக உள்ளது. இதை எல்லாம் அனுமதிப்பது யார் என கேட்டிருந்தார்.

ஜனாதிபதியின் இந்த அறிவிப்பால் கலக்கமடைந்த விமான நிறுவனம், உயர்மட்டக் கூட்டத்தை அவசரமாகக் கூட்டி முக்கிய முடிவெடுத்திருந்தது.

இந்நிலையிலேயே ஜனாதிபதி மைத்திரியை சீண்டும் வகையில் தனது சகாவுடன் விமானத்திலிருந்து கஜூ வைத் திருப்பதுபோல் படமெடுத்து அதை டுவிட்டரில் பதிவிட்டுள்ளார் நாமல் எம்.பி.

## தேசிய ரீதியில் தங்கப் பதக்கம் வென்ற கிளி. இந்துக் கல்லூரி அணிக்கு நேற்று பாராட்டு நிகழ்வு



இருபது வயதிற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான மென்பந்து போட்டியில் தேசிய ரீதியில் முதல் இடம்பெற்று தங்கப் பதக்கம் வென்ற கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணிக்கு பல தரப்பினர்களும் தங்களது பாராட்டுக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

கடந்தவாரம் இடம்பெற்ற போட்டியில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி நெதிரிகிரிய தேசிய பாடசாலை அணியை எதிர்த்து போட்டியிட்டு வெற்றி பெற்றது.

இதன் மூலம் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி கிளி நொச்சி மாவட்டத்திற்கும் வடக்கு மாகாணத்திற்கும் பெருமை சேர்த்துள்ளது என நேற்று வெற்றிப்பெற்ற அணியை சந் தித்து வாழ்த்து தெரிவித்த முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர் சந்திரகுமார் தெரிவித்துள்ளார். (இ - 70)

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஜெனீவாவுக்கு செல்ல விசா மறுப்பு!

கிளிநொச்சி, செப். 15

கிளிநொச்சியில் தொடர் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடு பட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகக் கூட்டத்தொடரில் கலந்துகொள்வதற்கான விசா மறுக்கப்பட்டமை தொடர்பில் ஊடக சந்திப்பொன்றை நேற்று நடத்தியுள்ளனர்.

இறுதி யுத்தத்தின் பின்னர் இராணுவத்திடம் சரணடைந்த மற்றும் கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட தங்களது உறவுகளுக்கு நீதி கோரி கடந்த 560 நாள்களாக போராடி வருகின்றோம்

ஆனால், தமக்கான தீர்வுகிடைக்கும் வரை தமது போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை என்றும் அரசு காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கு நீதியை பெற்றுத் தர வேண்டும் எனவும் தெரிவித்தனர். (க - 70)

வேலைவாய்ப்பு

AD சாரதி அனுமதிப் பத்திரம் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :- 0775002840

காலைக்கதிர்
Kalaikkathir

## கூட்டமைப்பின் தலைமைக்கு எதிராக கருத்துக் கூறவில்லை

### சி.வீ.கே.சிவஞானம் விளக்கம்

யாழ்ப்பாணம், செப்.15

வடக்கு மாகாண சபை தொடர்பில் கடந்த 12 ஆம் திகதி நடந்த ஊடக சந்திப்பில் நான் முன்வைத்த கருத்து கூட்டமைப்பின் தலைமைக்கு எதிரான கருத்தல்ல.

– இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம்.

இது தொடர்பில் அவர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

12.09.2018 ஆம் திகதி இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை பற்றி நான் தெரிவித்த கருத்து தலைமைக்கு எதிரான கருத்தோ அல்லது கண்டனக் கருத்தோ அல்ல.

மாறாக அது எனது ஆதங்கத்தின் பால் எழுந்தவை. கடந்த மூன்று மாதங்களாக இடம்பெற்ற ஒவ்வொரு அமர்வுக்கு செல்லும் போதிலிருந்து அமர்வை ஒத்தி வைக்கும் வரை எனக்கிருந்த பயமும் பதற்றமும் எனது அனுபவப் பட்டறிவாகும்.

உண்மையில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைமைகள் யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு எமக்கு உதவியிருக்கலாம் என்ற ஆதங்கத்தையே நான் தெரிவித்தேன். இது கூட்டமைப்பின் தலைமைக்கோ பங்காளிக் கட்சிகளுக்கோ எதிரானது அல்ல. தற்போது கட்சிகள் கூட தலையிட்டுத் தீர்க்க முடியாத நிலை உருவாகி விட்டதையே நான் குறிப்பிட்டேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுவத்தவரை அதன் தலைவர் இரா. சம்பந்தன் அவர்கள் மீது நூறு வீத நம்பிக்கை கொண்டுள்ளது மட்டுமன்றி அவருடைய காலத்தில் எமது இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்ற முழு நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் கொண்டவன் நான்.

அதேபோல் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா அவர்கள் மீதும் முழு நம்பிக்கையும் கொண்டவன் நான். பங்காளிக் கட்சி தலைவர்களுடன் மிகுந்த நல்லுறவைப் பேணி வருபவன் நான்.

மேலும் எனது பேட்டியின் ஏனைய கருத்துக்களைக் கவனித்தால் அனைத்தும் எனது ஆதங்கத்தின் வெளிப்பாட்டைப் புரிந்து கொள்ளலாம்.

இப்பொழுதும் நான் எடுக்கும் முயற்சிகள் வெற்றிபெற்றாலும் பெறாவிட்டாலும் அவையும் நான் சார்ந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சார்ந்தது தான்.

இந்த நிலையில் தற்போது எழுந்துள்ள இக்கட்டான நிலைக்கான தீர்வைக் காண எல்லோரது ஒத்துழைப்பையும் ஆதரவையும் தமிழ் தேசியம் சார்ந்து வேண்டி நிற்கின்றேன். – என்றுள்ளது. (ஐ)

# சமஷ்டி முறைத் தீர்வுக்காக அழுத்தவேண்டும் இந்தியா

## தூதுவரிடம் கூட்டமைப்பு வலியுறுத்தல்



**மட்டக்களப்பு, செப்ரெம்பர் 15**

**இலங்கை அரசாங்கம் முன்னெடுத்துவரும் அரசியல்தீர்வு வரைவில் சமஷ்டி முறைத் தீர்வை வழங்குவதற்குத் தேவையான அழுத்தங்களை இந்தியா கொடுக்கவேண்டும் என தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளர் கி.துரைராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.**

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு முதன் முறையாக பயணம் செய்த இலங்கைக்கான இந்திய தூதுவர் தரன்ஜித் சிங் சந்துவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முக்கியஸ்தர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று பாசிக்குடாவில் நடைபெற்றது.

இதன்போது கிழக்கு மாகாணத்தின் இன்றைய நிலை, தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து தூதுவருடன் கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தின் தமிழர் பகுதிகளை மீளக்கட்டியெழுப்புவதற்கு இந்தியா ஆதரவை வழங்கவேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டதாகவும், அது தொடர்பில் நடவடிக்கையெடுக்கப்படும் என தூதுவர் உறுதியளித்தார் எனவும் துரைராஜசிங்கம் மேலும் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பில் இந்திய தூதரகத்தின் உப அலுவலகம் ஒன்றையும் திறக்குமாறு தாங்கள் இந்தச் சந்திப்பில் கோரிக்கை முன்வைத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

தமிழரசுக்கட்சியின் பொதுச்செயலாளர் கி.துரைராஜசிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.வியாழேந்திரன், ஞா.சிறிநேசன், க.கோடிஸ்வரன், முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், முன்னாள் கிழக்கு மாகாணசபை தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார் உள்ளிட்டவர்கள் இந்தச்சந்திப்பில் கலந்து கொண்டனர். (ஐ)

# குடும்ப ஆட்சியை நிலைநாட்ட மோடியிடம் மஹிந்த தஞ்சம்

## கடுமையாக சாடுகின்றது ஐ.தே.க.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்குச் சென்று இரட்டை வேடமிட்டு நாடகமாடுகின்றார். இலங்கையில் குடும்ப ஆட்சியை நிலைநாட்டுவதே அவரது பயணத்தின் நோக்கமாக உள்ளது. டில்லியில் ஒரு முகத்தையும் கொழும்பில் போலி தேசப்பற்று முகத்தையும் காண்பித்து நாட்டு மக்களை ஏமாற்றி வருகின்றார்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்சன ராஜகருணா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ஒருபுறம் இந்தியாவையும் மறுபுறம் இலங்கை மக்களையும் ஏமாற்றி வருகின்றார். சீனா சென்று இந்தியாவைப் பற்றிக் குறைக் கூறுவதும் இந்தியாவுக்குச் சென்று சீனாவைக்குறைகூறுவதுமட்டுமல்லாமல் இலங்கைக்கு வந்து சீனா மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகள் பற்றியும் குறைகூறுகின்றார்.

13ஆம் அரசமைப்புச் சீர்த்திருத்தத்துக்கு அப்பால் அதிகமான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதாக முன்னாள் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு வாக்குறுதி வழங்கிவிட்டு இங்கு வந்து தலைகீழாகவே செயற்பட்டார். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு வந்தபோது அன்றைய தினத்தைக் கறுப்புத்தினமாக அறிவிக்கவேண்டும் என கேள்வி எழுப்பினர்.

இந்தியா சென்றுள்ள மஹிந்தவிடம் 2019 ஆம் ஆண்டு பொது தேர்தலுக்கான வேட்பாளர் உங்களது குடும்பத்தைச் சார்ந்தவராக இருப்பாரா அல்லது வேறொரு நபரைத் தெரிவு செய்வீர்களா என்று வினவியபோது, அதற்கு அவர் ஜனாதிபதி வேட்பாளருக்காகத் தனது சகோதரர் (கோட்டாபய) முன்வரலாம் என்று குறிப்பிட்டிருந்தார். வயதுச் சிக்கலினால் மகன் நாமலை வேட்பாளராகத் தெரிவு செய்ய முடியாது. ஆனால், நிச்சயமாக எனது சகோதரர் தேர்தல் வேட்பாளராக இருப்பார். கட்சியே யார் என்பதை அறிவிக்க வேண்டும் என்று பதில் அளித்திருந்தார்.

நாமல் அல்லது அவரது சகோதரர் வேட்பாளராக இருக்கவேண்டும் என்பதே அவரின் பிரதான நோக்கமாக அமைந்துள்ளது என்பது தெளிவாக வெளிப்பட்டுள்ளது. தனது மகன் ஒரு கட்டத்தில் ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கவேண்டும் என்பதில் அவர் உறுதியாகவுள்ளார். எதிர்த்தரப்பின் சார்பில் தினேஷ் குணவர்தன, வாசுதேவ நாணயக்கார போன்றவர்களை நிறுத்துவதை மறுத்து குடும்ப ஆட்சியை நிலைநாட்ட மஹிந்த செயற்பட்டுவருகின்றார்.

இங்கு தனது சகோதரரின் பெயரை ஜனாதிபதி வேட்பாளராகக் குறிப்பிட்டு வந்த முன்னாள் ஜனாதிபதி இந்திய ஊடகத்தில் பகிரங்கமாகத் தனது மகனை ஜனாதிபதியாக்குவேன் என்று குறிப்பிடுவது ஏமாற்று வேலையாகும். மக்களை ஏமாற்றும் தனது இரட்டை வேடத்தை இந்திய ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியின் ஊடாக மஹிந்த வெளிப்படுத்திவிட்டார். என்றார். (ஐ)

## இனி...

எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றது.

இவ்விவகாரத்தை நீதிமன்றத்தில் இழுபடவிடாமல் தீர்ப்பதற்கான முன் முயற்சிகளில் அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் பகீரதப் பிரயத்தன முயற்சிகளில் ஈடுபட்டிருக்கின்றார். தாம் தலைமை வகிக்கும் அவையின் பதவிக் காலத்தை சட்ட இழுபறியில்லாமல் முடித்து வைக்க வேண்டும் என்ற ஆதங்கத்தில் அவர் விடாமல் முயல்கின்றார் என்று தெரிகின்றது.

நல்ல வேளையாக இந்த வழக்கில் பிரதிவாதிகளான முதல்வருக்கும் மற்றைய இரண்டு அமைச்சர்களுக்கும் இன்னும் குற்றப்பத்திரம் வாசித்துக் கையளிக்கப்படவில்லை. கடந்த தவணையின் போது நேரில் பிரசன்னமாகக் கட்டளையிடப்பட்டிருந்த மூவரும் அவர்கள் பெயர்கள் மன்றில் அழைக்கப்பட்ட போது எழுந்து தங்கள் பிரசன்னத்தைப் பதிவு செய்தார்கள். வழக்கின் இரண்டாவது நீதியரசர் அன்று விடுமுறையில் சென்றமையால் குற்றப் பத்திரம் வாசித்துக் கையளிக்கின்றமை அன்று இடம்பெறவில்லை.

அது பெரும்பாலும் செவ்வாய்க் கிழமையன்று இடம்பெறக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. குற்றப்பத்திரம் வாசித்துக் கையளிக்கப்பட்டு விட்டால் அதன்பின்னர் இருதரப்பு இணக்கத்தோடு பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்ப்பது என்பது இந்த விவகாரத்தில் இயலாததாகி விடும் என சட்ட வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

*“இது நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்று நடக்காதமை தொடர்பிலான நீதிமன்ற அவமதிப்பு வழக்கு. குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு சம்பந்தப்பட்டோருக்குக் கையளிக்கப்பட்டு விட்டால் அது தொடர்பில் நீதிமன்றம்தான் தீர்மானிக்கலாம். சம்பந்தப்பட்ட தரப்புகள் தமக்குள் சுமுகமாகத் தீர்க்க இணங்கினாலும் கூட நீதிமன்ற அவமதிப்பு விடயம் அங்கு எஞ்சி நிற்கும். நீதிமன்றே அது குறித்து தீர்மானிக்க முடியும். நீதிமன்ற அவமதிப்பு, குற்றம் சுமத்தப்பட்டு நீதிமன்றத்தின் கவனத்துக்கு வந்த பின்னர் நீதிமன்றம் அதில் விட்டுக் கொடுத்து இணங்கிப் போக வாய்ப்பில்லை.”*

– என்று சுட்டுகின்றன அந்த வட் டாரங்கள்.

மீண்டும் அமைச்சர் பதவிக்கு வந்தால் இதுவரை காலத்துக்குரிய அமைச்சர் பதவிக்கான வேதனத்தைத் தாம் கோர மாட்டார் என்று டெனிஸ்வரன் உறுதியளித்திருக்கின்றார் எனத் தகவல்.

இவ்வாறான பின்புலத்தில் செவ்வாய்க் கிழமைக்கு முன்னர் – இந்த வழக்கு மீண்டும் நீதிமன்றத்தில் எடுக்கப்பட முன்னர் –நீதிமன்றத்தின் முன்னைய இடைக் கால உத்தரவின் சில பகுதிகளையாவது நடைமுறைப்படுத்தி விட்டோம் அல்லது நடைமுறைப்படுத்தத் தயராக இருக்கிறோம் என்று முதல்வர் தரப்பு நீதிமன்றத்தில் கோடி காட்டுமானால், நீதிமன்ற அவமதிப்புக்கான குற்றப் பத்திரத்தை வாசிப்பதையும், மேல் நடவடிக்கை எடுப்பதையும் இன்னும் ஒரு வாரம் அல்லது பத்து நாள்கள் தள்ளி வைப்பதற்கு நீதிமன்றம் இணங்கக் கூடும். இல்லையேல் நீதிமன்ற அவமதிப்பு விவகார விசாரணையை மேன் முறையீட்டு நீதிமன்றம் துரிதமாக முன்னெடுக்கும். வடக்கு மாகாண சபையின் பதவிக் காலம் அடுத்த ஒக்ரோபர் 25 ஆம் திகதி – அதாவது இன்னும் ஆறு வாரத்தில் – முடிவடைவதற்கு முன்னரே இவ்விடயத்தில் நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளி வந்தாலும் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

நான் முன்னர் இப்பத்தியில் சுட்டிக் காட்டியபடி முதல்வரையும் மற்றைய இரண்டு அமைச்சர் களையும் பொறுத்த வரை நீதிமன்ற அவமதிப்பு விவகாரம் காலைச் சுற்றிய பாம்பு. தந்திரோபாயமாக– சாணக்கியமாக – சட்ட நுணுக்கத்துடன் – அணுகி இதனைக் கவனமாகக் கையாள வேண்டும். வீண் பிடிவாதம் விபரீதத்தைக் கொண்டு வந்துவிடும். சம்பந்தப்பட்ட தரப்புச் சட்டத்தரணி கள் தத்தமது கட்சிக்காரர்களின் நலனைக் கவனிப்பதில் அதிக சிரத்தை காட்ட வேண்டும் என்று கோருகின்றோம்.

காலைச் சுற்றிய பாம்பைக் கழற்றிவிடுவதில் அசிரத்தையாக இருந்தால் விவகாரம் விபரீதமா வதைத் தடுக்க முடியாமல் போகும்.

-மின்னல்-

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## பிரதிபலிப்பை வெளிப்படுத்துங்கள்

நல்லாட்சி அரசின் கீழும் தமிழர்களுக்கு நீதி கிடைக்காது என்பது தெளிவாகி வருகின்றது எனச் சுட்டிக் காட்டியிருக்கின்றார் ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் செயலாளர் நாயகம் சுரேஷ் பிறேமச்சந்திரன்.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான யுத்தக் குற்றங்கள் தொடர்பில் நீதியான விசாரணைகள் நடத்தப்பட்டு, உண்மைகள் கண்டறியப்பட்டு, குற்றவாளி சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு, நீதி நிலைநாட்டப்பட்டு, பொறுப்புக் கூறல் நடைமுறைப்படுத்தப்பட்டு, பாதிப்புற்றோருக்கு இழப்பீடுகள் உரிய முறையில் வழங்கப்பட்டு, மீள நிகழாமை உறுதிப்படுத்தப்படும் என இலங்கை அரசு உத்தரவாதமளித்திருந்தது.

அதுவும், இலங்கை தானும் சேர்ந்து ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலில் நிறைவேற்றிய தீர்மானம் மூலம் – அதுவும் ஒன்றுக்கு இரண்டு தடவைகள் தானே முன்னின்று அனுசரணை வழங்கி நிறைவேற்றிய தீர்மானம் மூலம் – இந்த உத்தரவாதத்தை வழங்கியிருந்தது.

ஆனால், இந்த உத்தரவாதத்தில் எதுவும் நடக்கவேயில்லை – வெறுமனே சுமார் மூன்றே முக்கால் வருடங்கள் கழிந்தமையைத் தவிர.

எனினும், இது விடயத்தில் நல்லாட்சி அரசின் உண்மையான நோக்கம், இலக்கு என்னவென்று இப்போது அம்பலமாகி வருகின்றது.

இது விடயத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்டு வரும் கருத்துகள் முக்கியமானவை.

இந்த நல்லாட்சி அரசு பதவிக்கு வந்தமையாலேயே நாட்டின் பல தலைவர்களும் ஏனையோரும் எதிர் நோக்கவிருந்த மின்சாரக் கதிரை மரண தண்டனையிலிருந்து அவர்களை விடுவிக்க முடிந்தது என்றும், இலங்கைக்கு எதிராக எழுந்த சர்வதேச நிலைப்பாட்டை முழுமையாகத் திருப்ப முடிந்தது என்றும் அவர் கூறியிருந்தார்.

இப்போது நாட்டின் படையினரை முழுமையாக விடுவித்துக் காப்பாற்றுவதற்குப் புதிய யோசனை ஒன்றை இம்மாதம் ஐ.நா.பொதுச் சபையில் தாம் உரையாற்றும்போது முன்வைக்கப் போகின்றார் என அவர் அறிவித்திருக்கின்றார்.

அது மாத்திரமல்ல, அவரது செயற்பாடு முழுவதுமே அப்பாவித் தமிழருக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்களுக்கு நீதி பெற்றுக் கொடுப்பதல்ல, மாறாகக் குற்றமிழைத்த படையினரை முழுமையாகப் காப்பாற்றுவதன் மூலம் தென்னிலங்கையில் தமக்கிருந்த செல்வாக்கைத் தக்க வைக்க முயற்சிப்பதுதான் என்பதும் அப்பட்டமாக வெளிப்படையாகி வருகின்றது.

ரவிராஜ் எம்.பி. படுகொலை விவகாரத்திலும், மாணவர்கள் உட்பட பதினொரு பேரைக் கடத்திக் கப்பம் கோரியமை மட்டுமல்லாமல் அவர்களைக் காணாமலாக்கிய விவகாரத்திலும் தொடர்புபட்ட முக்கிய சந்தேக நபரான நேவி சம்பத்தை நாட்டை விட்டுத் தப்பிக் செல்ல உதவிய குற்றச்சாட்டில் சிக்கியவர் இலங்கைப் பாதுகாப்புப் பணியாளர்களின் பிரதானியான ரவீந்திர விஜேகுணவர்த்தன. நீதிமன்றத்தின் கைது உத்தரவு இருக்கத்தக்கதாக அவர் நாட்டிலிருந்து வெளியேறியிருக்கின்றார். அதற்கு ஜனாதிபதியின் ஆசீர்வாதமும் கிட்டியிருக்கின்றது. இந்த விடயத்தில் ஜனாதிபதி எப்படி எதிர்வினையாற்றுகின்றார், எப்படிச் செயற்படுகின்றார் என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பியே விசனத்துடன் சுட்டிக் காட்டிக் கருத்து வெளியிட்டு அதிருப்தி தெரிவித்திருக்கின்றார்.

யுத்தக் கொடூரத்துக்கு உள்ளான தமிழர்களுக்கு நீதி பெற்றுத் தருவதில் விருப்பமோ பற்றுதியோ கொண்டிராத – மாறாக, குற்றமிழைத்த படையினரை முழு முனைப்புடன் காப்பாற்றுகின்ற – வழமையான தென்னிலங்கை சிங்களத் தலைவர்கள் போன்றே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் உள்ளார்என்பதுமீண்டும்மீண்டும்நிரூபணமாகிவருகையில்தான் இந்தக் கேள்வி ஒன்றை சுரேஷ் பிறேமச்சந்திரன் எழுப்பியிருக்கின்றார்.

ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை அரசுக்காக உத்தரவாதம் பெற்றுக் கொடுத்து, பின்னர் கால அவகாசமும் வாங்கிக் கொடுப்பதற்கு உதவிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு – குறிப்பாக அதன் ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரும் – இவ் விடயம் குறித்து தமது நிலைப்பாட்டை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என அவர் கோரியிருக்கின்றார்.

நியாயமான கோரிக்கைதான். பதிலளிக்கப்பட வேண்டிய விடயம்தான்.

தமது தற்போதைய ஆட்சிக் காலத்துக்குரிய இறுதி ஆண்டில் இந்த ஜனாதிபதி நுழையும் இச் சமயத்திலாவது அவர் தொடர்பில் தமது எதிர்பார்ப்பையும், அதற்கு மாறாக அவர் செயற்பட்டமை தொடர்பான தமது கணிப்பீட்டையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பகிரங்கமாக முன்வைக்க வேண்டிய வேளையும், சந்தர்ப்பமும் வந்துவிட்டன என்றேதோன்றுகின்றது.

ஆனாலும் ஒரு விடயம், மைத்திரிபால சிறிசேனவையும் இந்த நல்லாட்சி அரசையும் ஆட்சி அதிகாரத்துக்கு கொண்டு வந்தமையிலும், ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலில் 30/1 தீர்மானம் மூலம் இலங்கையைப் பாதுகாத்து சர்வதேச சமூகத்தில் காபந்து பண்ணியதிலும் தமிழ்க் கூட்டமைப்புக்கு உள்ள பங்கு, பொறுப்புகளில் சுரேஷ் பிறேமச்சந்திரனின் ஈடுபாடும் மறக்கப்பாலதல்ல; மறைக்கப்பாலதல்ல.

# அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் ராஜபக்ஷ குடும்ப வேட்பாளரா?

## மஹிந்தவின் கருத்துக்கு குமார வெல்கம அதிருப்தி



ராஜபக்ஷ குடும்பத்திலிருந்து அடுத்து ஜனாதிபதி வேட்பாளர் வருவார் என்று மஹிந்த கூறியமை தொடர்பாக குமார் வெல்கம அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

தனது சகோதரரே ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்கப்படுவார்என மஹிந்த இந்திய ஊடகம் ஒன்றுக்குக் கருத்து தெரிவித்திருந்தார்.

இதனைக் கடுமையாக விமர்சித்துள்ள, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம, கட்சியை ராஜபக்ஷ குடும்பத்துக்கு மாத்திரம் சொந்தமாக்கிக்கொள்ள இடமளிக்க முடியாது எனக் கூறியுள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு கட்சியில் சிரேஷ்ட உறுப்பினர்கள் இருக்கையில், தனது சகோதரர் வேட்பாளராகலாம் என மஹிந்த தெரிவித்திருக்கின்றமையை வன்மையாகக் கண்டித்துள்ளார்.

மஹிந்தவின் குடும்ப ஆட்சிக்கு வழியேற்படுத்திக் கொடுப்பது, எதிர்காலத்தில் மீண்டுமொரு சிறிசேனவை உருவாக்குவதற்கு சமானதாகும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

### சொகுசுக் கதிரை விவகாரம்;

# மேல் மாகாண முதலமைச்சரின் முடிவை நிராகரித்தார் ஆளுநர்

மேல் மாகாண சபைக்குக் கூடுதல் விலைக்குக் கதிரைகளைக் கொள்வனவு செய்யும் முடிவை மாகாண ஆளுநரான ஹேமகுமார நாணயக்கார நிராகரித்துள்ளார்.

மேல் மாகாண சபை உறுப்பினர்களுக்காகச் சொகுசுக் கதிரைகளை அதிக விலை கொடுத்து கொள்வனவு செய்வதற்கு மாகாண முதலமைச்சர் எடுத்திருந்த முடிவானது அரசியல் களத்தில் பெரும் சர்ச்சையைக் கிளப்பிவிட்டது.

ஒரு கதிரையின் விலை பல இலட்சம் ரூபாவைத் தாண்டும்



வகையில் அமைந்திருந்ததால் பல தரப்பினரும் போர்க்கொடி தூக்கினர்.

இந்நிலையில், சபையின் முடிவு தொடர்பில் பரிசீலிப்பதற்காக ஆளுநர் குழுவொன்றை அமைத்திருந்தார். அந்தக் குழுவின் முடிவின் பிரகாரமே இரத்துச் செய்யும் முடிவை ஆளுநர் எடுத்துள்ளார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர்,

104 கதிரைகளே தேவைப்படுகின்றன. ஆனால், 150 கதிரைகள் வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது. விலையும் அதிகம். இதனால் தான் தடுத்து நிறுத்தினேன். உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் கதிரைகளை உரிய விலைக்கு வாங்குவதே பொருத்தமானகும். மக்களின் பணத்தை வீண்விரயம் செய்ய முடியாது.– என்றார்.

# தென்கொரிய அமைச்சரை சந்தித்தார் பிரதமர் ரணில்



ஹனோய், செப் 15

தென்கொரியா கைத்தொழில் மற்றும் வணிகத் துறையில் தகவல் தொழிநுட்பத்தைப் பயன்படுத்துவதில் மிகவும் முன்னேறியுள்ளமையால், அந்தத் தொழிநுட்பம் மற்றும் அனுபவங்களை இலங்கை உட்பட ஆசிய நாடுகளுடன் பகிர்ந்துகொள்ளும் விருப்புடன் தாம் உள்ளதாக தென்கொரிய வெளிநாட்டமைச்சர் கங் குயுங் வா குறிப்பிட்டார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தென்கொரிய கைத்தொழில் வலயமொன்றை நிறுவுவது தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இவ்வாறான கைத்தொழில் வலயம் ஊடாக இரு நாடுகளுக்கும் நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியுமான பல வழிகள் புதிதாகத் திறந்து விடப்படுகின்றன என அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம சுட்டிக்காட்டினார்.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமைதி மற்றும் சுதந்திரக் கப்பற் போக்குவரத்தைப் பாதுகாப்பதற்கு இலங்கை மேற்கொள்ளும் முயற்சியைப் பாராட்டிய தென்கொரிய வெளிநாட்டமைச்சர், தாம் எப்போதும் அனைத்துப் பிரச்சினைகளையும் கலந்துரையாடல் மூலம் சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளும் வழிமுறையைப் பின்பற்றுவதாகக் கூறினார்.

கொரியப் பிராந்தியத்தில் அமைதியை நிலைநாட்டுவது தொடர்பாகவும் இதன்போது கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

கொரியப் பிராந்தியத்தில் அமைதியையே இலங்கை விரும்புகிறது என்று இதன்போது பிரதமர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# சமலையே கூறியிருப்பார் மஹிந்த

சமல் ராஜபக்ஷவை எண்ணத்தில் வைத்துக்கொண்டே ஜனாதிபதி வேட்பாளராகத் தனது சகோதரர் ஒருவர் தேர்தலில் போட்டியிடுவார் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தெரிவித்திருக்கலாம்எனகூட்டுஎதிரணியின் உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு விஜயத்தை மேற்கொண்டிருந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த, எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தனது சகோதரர் ஒருவர் வேட்பாளராகத் தெரிவு செய்யப்படலாம் என தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்

சமல் மாத்திரமே தற்போது அரசியலில் ஈடுபடுகின்றார். சமலின் பெயரை எண்ணத்தில் வைத்துக்கொண்டே அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தனது சகோதரர் ஒருவர் வேட்பாளராக போட்டியிடலாம் என மஹிந்த தெரிவித்திருக்கலாம் – என்றார்.

## நாளை

16.09.2018
ஞாயிற்றுக்கிழமை

நட்சத்திரம் : அனுஷம் மு.ப 7.22 வரை
திதி: ஸ்டதமி மு.இ 7.40 வரை
சுபநேரம் : 9.03 – 10.33 வரை
இராகுகாலம் : 4.33 – 6.03 வரை

## ‘டெங்கை ஒழிப்போம் தேசத்தைக் காப்போம்’:

# மட்டு. நகரில் விழிப்புணர்வு ஊர்வலம்!





மட்டக்களப்பு, செப்.15

மட்டக்களப்பில் 'டெங்குவை ஒழிப் போம் தேசத்தை காப்போம்' எனும் தொனிப்பொருளில் மாபெரும் விழிப் புணர்வு ஊர்வலமொன்று முன்னெடுக் கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு கல்வி வலயமும், மட்டக்களப்பு சுகாதார திணைக்களமும் இணைந்து நேற்றுக் காலை இந்த விழிப்புணர்வு ஊர்வலத்தை முன் னெடுத்துள்ளனர்.

இதன்போது டெங்கு தாக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வு பதாகைக ளைப் போராட்டத்தில் கலந்து கொண்ட மாணவர்கள் தாங்கியிருந்தமையு டன், கோசங்களையும் எழுப்பியுள்ள னர்.

இந்த விழிப்புணர்வு ஊர்வலத்தில் மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் வித்தி யாலய பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப் பிடத்தக்கது.

(க)

## மோ. சைக்கிளில் பயணித்த கர்ப்பிணி விபத்தில் பலி!

மோட்டார்சைக்கிளில் பயணம் செய்த கர்ப்பிணிப் பெண்ணொருவர் விபத்திற்கு இலக்காகி உயிரிழந்த சம்பவம் ஆராச்சிக்கட்டுவ பகுதியில் இடம்பெற்றுள்ளது.

ஆராச்சிக்கட்டுவ, போப்பன்கம பிரதேசத்தைச்சேர்ந்த யமுனா ருவந்தி (28 வயது) என்ற கர்ப்பிணிப் பெண்ணே சம்பவத்தில் உயிரிழந் துள்ளார்.

இந்தப் பெண் தனது 8 வயது மகனை மோட்டார்சைக்கிளில் ஏற்றிச் சென்று கொண்டிருந்த போது மது போதையில் வந்த நபரொருவரின் மோட்டார்சைக்கிள் மோதியதாலேயே விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் காயமடைந்த மகனும், தாயும் சிலாபம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தனர். இந்த நிலை யில் சிலாபம் வைத்தியசாலையில் வைத்து பெண்ணின் வயிற்றில் இருந்த 8 மாத பெண் சிசு உயிரி ழந்துள்ளது.

அதன்பின் தாயும், மகனும் கொழும்பு வைத்தியசாலைக்கு மாற் றப்பட்டனர் என சிலாபம் வைத்திய சாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தநிலையில் கடந்த எட்டாம் திகதி இரவு இந்தப் பெண் கொழும்பு வைத்தியசாலையில் வைத்து உயிரி ழந்துள்ளார்.

எனினும் கடுங்காயங்களுக்கு உள்ளான சிறுவன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரு கிறார் என பொலிஸார் தெரி வித்துள்ளனர். விபத்துக்கு காரண மான நபரை ஆராச்சிக்கட்டுவ பொலி ஸார் கைது செய்துள்ளனர்.

## கை, கால் கட்டப்பட்ட நிலையில் மன்னார் புதைகுழியில் எலும்புக்கூடு




மன்னார், செப்.15

மன்னார் 'சதொச' வளாகத் தில் தொடர்ச்சியாக பல்வேறு கேள்விகள் சந்தேகங்களை ஏற்படுத்தக் கூடிய வகையில் தொடர்ச்சியாக மனித எலும் புக்கூடுகள் மீட்கப்பட்டு வரு கின்றன.

நேற்று 71 ஆவது தட வையாக அகழ்வுப் பணிகள் இடம் பெற்றன. இதுவரை 126 முழுமையான மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன, அவற்றில் 120 மனித எலும் புக்கூடுகள் அப்புறப்படுத்தப்பட்டு, பொதி செய்யப்பட்டு, நீதிமன்றக் கட்டடத்தொகுதியில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மன்னார் நீதிவான் ரி.சரவணராஜா மேற்பார்வையில் சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷ மற்றும் களனி பல்கலைக் கழக பேராசிரியர் தலைமையில் மன்னார் 'சதொச' வளாகத்தில் அடையாளப்படுத்தப்பட் டுள்ள மற்றும் புதிதாக அடையாளப்படுத்தப்படும் மனித எலும்புக்கூடுகளை அப்புறப்படுத்தும் மற்றும் ஆய்வு செய்யும் பணி தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற அகழ்வு பணியின் போது கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் புதைக்கப்பட்டிருக்கலாம்? எனச் சந்தேகத்தை ஏற்படுத்தக் கூடிய மனித எச்சம் ஒன்று அடையாளப் படுத்தப்பட்டுள்ளது.

கைகள் இரண்டும் நெருக்கமாக பிணைக்கப்பட்ட நிலையிலும் கால்கள் இரண்டும் ஒன்றுடன் ஒன்று குறுக்காக பிணைக்கப்பட்ட விதத்திலும் மிகவும் நெருக் கத்துக்குள் புதைக்கப்பட்ட நிலையில் காணப்பட்டது.

இந்த மனித எலும்புக்கூடு கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் புதைக்கப்பட்டதா? அல்லது மத சடங்குக ளின் அடிப்படையில் புதைக்கப்பட்டதா? என்பது தொடர் பாக எந்தவித ஊகிப்புக்களும் தற்போது மேற்கொள்ள முடியவில்லை.

எனினும் இது வரை மீட்கப்பட்ட மனித எலும்புக்கூடு கள் மற்றும் புதைக்கப்பட்ட நிலை மூலமாக இந்த மனித உடல்கள் சாதாரண நிலையில் புதைக்கப்பட்டவை என நிச்சயம் ஏற்றுக் கொள்ள முடியாத விடயமாகக் காணப்பட்டாலும் இறுதிக்கட்ட பரிசோதனையின் பின்னரே தெரியவரும் என்பது குறிப்பிடத்தக்கது.

## அமைச்சர் அமுனுகம, அதாஉல்லா பொன்னாடை போர்த்தி கௌரவிப்பு



அக்கரைப்பற்று தொழிநுட் பக்கல்லூரியில் கற்கை நெறி களை பூர்த்தி செய்த மாணவர் களுக்கு சான்றிதழ்கள் வழங் கப்பட்டுள்ளன.

இது தொடர்பான நிகழ்வு அக் கரைப்பற்று அதாவுல்லா அரங் கில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் போது விஞ் ஞான தொழிநுட்ப ஆராய்ச்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சர் சரத் அமுனுகம மற்றும் முன் னாள் அமைச்சர் அதாஉல்லா ஆகியோர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

## பிரதமர் தலைமையில் சமுர்த்தி நிவாரண உரித்துக்களை வழங்கும் நிகழ்வு!

மாத்தளை, செப்.15

சமுர்த்தி நிவாரண பத்திரங் களை வழங்கும் நிகழ்வு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலை மையில் மாத்தளை எட்வர்ட் மைதானத்தில் இன்று நடைபெற வுள்ளது.

இந்த நிகழ்வில் சமூக வலு வூட்டல் அமைச்சர் பீ.ஹரிசன் மற்றும் பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கஉள்ளிட்டோர்கலந்து கொள்ளவுள்ளனர்.

2030 ஆம் ஆண்டளவில் வறுமையற்ற இலங்கை என்ற தொனி பொருளின் கீழ் சமூக வலுவூட்டல் தொடர்பான சமகால அரசின் கீழ் புதிய பரிந்துரைக்கு அமைவாகசமுர்த்திஉரித்துக்கள் வழங்கப்படுகின்றமை குறிப் பிடத்தக்கது

## தேசிய புத்தாக்க கண்காட்சி!

கொழும்பு, செப்.15

இலங்கைபுத்தாக்குநர்ஆணைக் குழு ஏழாவது முறையாக ஒழுங்கு செய்துள்ள தேசிய புத்தாக்க கண் காட்சி கொழும்பில் இலங்கை கண் காட்சி மற்றும் மாநாட்டு மண்டபத்தில் நேற்று ஆரம்பமானது.

இந்த கண்காட்சி நாளை 16 ஆம் திகதி வரை காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை பொது மக்க ளுக்காக திறந்திருக்கும்.

நான்கு பிரதான பிரிவுகளின் கீழ் வெவ்வேறாக தெரிவு செய்யப்பட்ட சிறந்த புத்தாக்கத்திற்கு தஸிஸ் விருது வழங்கப்படவுள்ளது.

இந்தக் கண்காட்சியை இலவ சமாக பொதுமக்கள் பார்வையிட முடியும் என்றும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

# நாளை மின் தடை

யாழ்ப்பாணம், செப். 15

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங் களின் கட்ட மைப்பு மற்றும் பராம ரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 6.00 மணி வரை–

யாழ் பிரதேசத்தில் –

உரும்பிராய் ஒரு பகுதி, கொல் லங்கலட்டி, மாவைகலட்டி, கீரி மலை, பத்தானை, சுதுமலை, மாப்பியன், சட்டநாதர் வீதி, பருத்தி த்துறை வீதியில் கல்வியங்காட்டு சந்தையிலிருந்துநல்லூர்கோவில் வரை, நல்லூர் குறுக்கு வீதி, செம்மணி வீதி, கச்சேரி நல்லூர் வீதி, கனகரட்ணம் வீதி, திருமகள் வீதி, மலர்மகள் வீதி, கலைமகள் வீதி, பூமகள் வீதி,சாஸ்திரியார் வீதி, நடுத்தெருலேன், நாவலர் வீதி, நொத்தாரிஸ் லேன், வேலப்பர் வீதி, புவனேஸ்வரி அம்மாள் வீதி, புறாடி லேன், ஸ்ரான்லி கல்லூரி வீதி, சுப்பிரமணியம்வீதி, முதலியார் வீதி, பாரதி லேன், புங்கன்குளம் வீதி புகையிரத கடவை வரை, நாயன்மார் வீதி, குகன் வீதி, பொன் னம்பலம் வீதி, நாவலர் வீதியில் மாம்பழம் சந்தியிருந்து நல்லூர் குறுக்கு வீதி வரை, யு9 வீதியில் பாரதி வீதியிலிருந்து செம்மணி வளைவு வரை, நெடுங்குளம் வீதி புகையிரதக் கடவை வரை, முள்ளி, நாவலடி, பூம்புகார், அரியாலை கிழக்கு, நாகர்கோவில், குடாரப்பு, மாமுனை, செம்பியன்பற்று, நெல் லியான் இராணுவ முகாம், மரு தங்கேணி, வத்திராயன், உடுத் துறை, கொடுக்குழாய், ஆழிய வளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, கேவில், வெற்றி லைக்கேணி இராணுவ முகாம், கட்டைக்காடு இராணுவ முகாம், Cey- Nor பவுண்டேன் லிமிற்றெட், மாவட்ட கடற்தொழில் கூட்டுறவுச் சங்கம், கனகரத்தினம் மத்திய ம காவித்தியாலயம், விவிவி சிறுவர் பூங்கா, அரியாலை டீசல் அன்ட் மோட்டார் என்ஜினியறிங் பி.எல்.சி, நாயன்மார்கட்டு Carlton Sports Network (CSN)ஆகிய இடங்க ளிலும் –

கிளிநொச்சி பிரதேசத்தில் –

பனிக்கன்குளம், CATIC பனிக் கன்குளம், மாங்குளம் கொலனி ஆகிய பிரதேசங்களிலும், மின் விநியோகம் தடைப் பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறி வித்துள்ளார்.

# யாழ். சாயி நிலையத்தில் நாளை இரத்த தான நிகழ்வு



யாழ்ப்பாணம், செப்.15

யாழ். திருநெல்வேலி சேர். பொன். இராமநாதன் வீதி – யாழ். பல்கலைக்கழகத்துக்கு முன்பாகவுள்ள சத்திய சாயி சேவா நிலைத்தில், நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் 12.30 மணி வரை இரத்த தான நிகழ்வு இடம்பெறவுள்ளது.

"விலைமதிப்பற்ற உயிரைக் காக்க வல்ல இரத்தத்தை தானம் செய்யும் நிகழ்வில் கலந்து கொண்டு உன்னத சேவை புரிவோம்; நண்பர்களுக்கு தெரியப்படுத்தி அவர்களையும் அழைத்து வாருங்கள்" என சாயி சேவா நிலையம் அன்புடன் அழைக்கின்றது. (இ



# தினசரி ராசி பலன் (15.09.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் ஆவணித்திங்கள் 30 ஆம் நாள் சனிக்கிழமை ஷஷ்டித்திதி பகல் 2.45 மணி வரை பின்னர் ஸப்தமி. நட்சத்திரம்: அனுஷம் பி.இ 2.49 மணி வரை பின்னர் கேட்டை. சித்தயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - காலை 9.03 மணி முதல் 10.34 மணி வரை.

**சுபநேரம்** - மாலை 3.01 மணி முதல் 4.32 மணி வரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி** - ஆவணி மாத வளர்பிறை ஷஷ்டி.

**பிறந்த நட்சத்திர வழிபாடு**- அனுஷம்.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**


**மேஷம்** சஞ்சலம் மிகுந்த நாள். பணவரவு குறையும். குடும்பத்தில் சலசலப்பு உண்டாகும். இருப்பிட வசதி குறையும். உத்தியோகத்தில் வேலைப் பளு அதிகரிக்கும். எண்ணியவை கை கூடாமற் போகும்.


**ரிஷபம்** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். தொழிலாளர்களுக்கு பொறுமை அவசியம். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் கிடைக்கும்.


**மிதுனம்** ஆக்கபூர்வமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்ப உறவு பாசமும், நேசமும் கலந்திருக்கும். சிலருக்கு உத்தியோக நிமித்தம் வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள நேரும்.


**கடகம்** சுபீட்சமான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும். சிலர் புது வீட்டிற்கு குடி போவார்கள் தொழிலில் பலத்த போட்டிகளை எளிதில் சமாளித்து முன்னேறுவார்கள்.


**சிம்மம்** சலனம் மிகுந்த நாள். எதிர்பார்த்த பணம் வரத் தாமதமாகும். குடும்பத்தில் அமைதி குன்றும். மனம் ஒரு வித சஞ்சல நிலையில் இருக்கும். செய்யும் தொழிலில் கடின உழைப்பு இருக்கும்.



**கன்னி** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் செலவினங்களை ஈடு செய்ய ஓரளவு போது மனதாக இருக்கும். உடலில் உபாதைகள் ஏற்பட்டு மருத்துவச் செலவுகள் உண்டாகும்.


**துலாம்** யோகமான நாள். பணபலம் அதிகரிக்கும். குடும்பத்தில் புரிந்துணர்வு அதிகரிக்கும். வீடு, வாகன, வசதிகள் பெருகும். மாணவர்களுக்கு மேற்படிப்புக்கான திட்டம் நிறைவேறும்.


**விருச்சிகம்** அதிர்ஷ்டமான நாள். பணம் பல வழிகளாலும் வந்து சேரும். குடும்பத்தில் ஒற்றுமை வலுவடையும். வியாபாரத்தில் மேலதிக லாபம் கிடைக்கும். தாய் வழிச் சொத்துக்கள் கைக்கு வரும்.


**தனுசு** சஞ்சலமான நாள். பொருளாதாரம் நலிவடையும். குடும்பத்தில் வீண் குழப்பங்கள் உண்டாகும். உறவினர்கள், நண்பர்கள் பாராமுகமாக நடந்து கொள்வார்கள். தொழிலில் தொய்வு நிலை உண்டாகும்.


**மகரம்** இன்பமான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்பத்தில் எல்லையற்ற மகிழ்ச்சி காணப்படும். ஆடை, ஆபரணச் சேர்கை உண்டாகும். திருமணமாகாதோருக்கு அதற்கான வாய்ப்பு வலிய வரும்.


**கும்பம்** மத்திமமான நாள். பொருள் வரவு சுமாராக இருக்கும். செலவினங்கள் அதிகரிக்கும். உத்தியோகத்தர்களுக்கு தொழில் துறையில் ஓரளவு முன்னேற்றம் காணப்படும். வேலைப் பளுவும் கூடும்.


**மீனம்** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றம் அடையும். குடும்ப ஒற்றுமை மேலோங்கிக் காணப்படும். வியாபாரத்தில் லாபம் கணிசமாகக் கிடைக்கும். சகோதர உறவு பலப்படும்.

**சந்திராஷ்டம நாள்: அசுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

சி.வை.தாமோதரம்பிள்ளை ஜனன தினம்:

# யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இன்று சுமந்திரன் எம்.பி. நினைவுப் பேருரை

## 'இன்றைய சமஷ்டியின் விஸ்தீரணம்' என்ற பொருளில்

யாழ்ப்பாணம், செப்.15

சிறிப்பிட்டி தமிழறிஞர் இராவ்பகதூர் சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்களின் 187 ஆவது ஜனன தின விழாவும் நினைவுப பேருரையும் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும்.

சி.வை.தாமோதரம் பிள்ளை ஞாபகார்த்த நற்பணி மன்றத்தின் செயலாளர் அ. அருந்தவநேசனின் வரவேற்புரையுடன் நிகழ்வில் தலைமையுரையை மன்றத்தின் தலைவர் செ.தவநாயகமும் நினைவுரையை யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் பரமு புஷ்பரட்ணமும் ஆற்றுவர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் "இன்றைய சமஷ்டியின் விஸ்தீரணம்" என்ற தலைப்பில் நினைவுப் பேருரை நிகழ்த்துவார். திருமதி தேவமூர்த்தி செல்வநிதி நன்றியுரையை ஆற்றுவார். (இ

# அலரிமாளிகை நிகழ்வுக்கு செல்லும்போது வீட்டிலிருந்தே உணவை எடுத்துச் செல்லுங்கள்

## ஜனாதிபதிக்கு கூறுகிறார் டிலான்



அலரிமாளிகையில் நடைபெறும் நிகழ்வுகளுக்கு ஜனாதிபதி செல்லும் போது வீட்டிலிருந்துஉணவுகளைஎடுத்துச் செல்லுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு–

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே பாதுகாப்பு அமைச்சராக இருக்கிறார். இந்த நிலையில் பாதுகாப்பு அதிகாரிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இது விஷம் கொடுக்கும் செயற்பாட்டுக்கு ஒப்பானதாகும். இதனாலேயே ஜனாதிபதியான பாதுகாப்பு அமைச்சரும் பாதுகாப்பாக இருக்க வேண்டும்.

எனவே, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அலரிமாளிகையில் ஏற்பாடுசெய்யப்படும் நிகழ்வுகளில் பங்கேற்பதாக இருப்பின் வீட்டிலிருந்து உணவுகளை எடுத்துச் செல்ல வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், எப்போதும் சமாதான முறை ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்படும்போது மக்களுக்கு விஷம் கொடுத்து ஆபத்து விளைவித்தது கிடையாது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# விஷ பால் பக்கெட் விவகாரம்: பஸில் சகாக்கள் மீது சந்தேகம்

## ஹர்ஷன எம்.பி. தெரிவிப்பு



எதிரணியினர் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணிக்கு முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் ஆதரவு கிடைக்கவில்லை. சர்ச்சைக்குரிய பால்பக்கெட்டுக்களை அவருடைய ஆதரவு குழுவினர் விநியோகித்திருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்துள்ளார்.

பொலிஸார் இது தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

நாமல் ராஜபக்ஷ எம்.பி. தனது ஆதரவைப் பலப்படுத்துவதற்கு முன்னெடுத்த நடவடிக்கைக்கு பஸில் ராஜபக்ஷ தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளார். இதன் காரணமாகவே அவர் நாட்டை விட்டும் வெளியேறிச் சென்றுள்ளார் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

சிறிகொத்தவில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப்.15

'சமகால அரசியலும் வடக்கு மாகாண சபையின் எதிர்காலமும்' என்ற தலைப்பில் கருத்தாடல் நிகழ்வு நாளை ஞாயிறு மாலை 4 மணிக்கு, யாழ். ஸ்ரான்லி வீதி டி.எம்.ஐ கல்வி நிறுவனத்தில் இடம்பெறும்.

சொ.சிவபாலன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில், ஏ.சி.ஜோர்ஜ் ஆரம்ப உரை ஆற்றுவார். ஆர்வலர்களை கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# வடக்கு மரபுரிமைக் கலைக்கூடம்; பாரம்பரிய பொருள்கள் திரட்டல்

யாழ்ப்பாணம், செப்.15

வட மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சால் வடக்கு மாகாண மரபுரிமைக் கலைக்கூடம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இக் கலைக்கூடத்திற்கு மக்கள் பாரம்பரிய பொருள்கள் மற்றும் எமது கலாசாரம் சார்ந்த பொருள்கள் எமது மக்களின் பயன்பாட்டிலிருந்து அருகி வந்துள்ள பொருள்கள் ஆகியவற்றை அன்பளிப்பாக வழங்கலாம். இப் பொருள்கள் பேணிப் பாதுகாப்பதுடன் மக்கள் பார்ப்பதற்கு ஏற்ற விதத்தில் காட்சிப்படுத்தப்படும்.

அத்துடன் அன்பளிப்புக்கள் வழங்கியவர்களின் பெயர்கள், பொருள்களின் பெறுமதி என்பன உரிய கலைக்கூடத்தில் காட்சிப்படுத்துவதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

இப் பொருள்களை அன்பளிப்பு செய்ய விரும்புவோர் மாவட்ட செயலகத்தில் கடமையாற்றும் மாவட்ட கலாசார உத்தியோகத்தருடன் அல்லது பிரதேச கலாசார உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் என்று அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (இ

# பொதுப் போக்குவரத்துச் சேவையை பயணிகளின் பாராட்டை பெறும் சேவையாக மாற்றவேண்டும் என்கிறார் ஜனாதிபதி!

கொழும்பு, செப். 15

நாட்டின் பொதுப்போக்குவரத்து சேவையை பயணிகளின் பாராட்டைப்பெறும் சேவையாக மாற்றுவது அவசியம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொதுப்போக்குவரத்து சேவையின் தரத்தை மேம்படுத்தி முறையான போக்குவரத்து சேவையாக அதனை பேணுவது தொடர்பாக நேற்றுமுன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலொன்றின் போதே ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

தரமான பொதுப்போக்குவரத்து சேவையை நாட்டுக்கு அறிமுகப்படுத்துவதற்காக 2016 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சஹசர திட்டத்தின் முன்னேற்றம் பற்றியும் தரமான போக்குவரத்து சேவையை நாடளாவிய ரீதியில் முன்னெடுப்பது பற்றியும் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.



நாட்டின் பொதுப்போக்குவரத்து சேவையை பலப்படுத்தி மாற்றுப் போக்குவரத்து முறைகளுக்கு திரும்பியுள்ள பயணிகளை மீண்டும் பொதுப்போக்குவரத்து சேவையின்பால் ஈர்த்தல், அதன்மூலம் நாட்டின் வீதிப் போக்குவரத்து நெரிசல்களைக் குறைத்தல், பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் உள்ளிட்ட பொதுப்போக்குவரத்தை மக்கள் நேயப் பொறிமுறையாக மாற்றும் விரிவான வேலைத் திட்டம் தொடர்பாக இதன்போது ஜனாதிபதி அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

போக்குவரத்துப் பிரச்சினை நாட்டின் பொருளாதாரத்திற்கு பெருமளவு தாக்கம் செலுத்துவதுடன், உரிய நேரத்திற்கு பயணங்களை மேற்கொள்ள முடியாதிருத்தல், பஸ்களில் அதிக நெரிசல், வீதிப் போக்குவரத்து நெரிசல்கள், நல்ல ஒழுக்கப் பண்பாட்டையுடைய சேவை கிடைக்காமை போன்ற பயணிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்ற விடயங்கள், பஸ் உரிமையாளர்களின் வருமானம் குறைந்து அவர்களிடையே போட்டித்தன்மை ஏற்படுதல், பஸ் ஊழியர்களிடம் தொழில் பற்றிய மதிப்பின்மை போன்ற பல்வேறு பிரச்சினைகள் இதனால் உருவாகியுள்ளன.

2008ஆம் ஆண்டு மொத்தப் பயணிகளில் 65 வீதமானவர்கள் பொதுப்போக்குவரத்தை பயன்படுத்திவந்த நிலையில், அதுதற்போது 40 வீதமாக குறைவடைந்துள்ளதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. போக்குவரத்து துறையிலுள்ள பிரச்சினைகள் காரணமாகவே பயணிகள் நாளுக்கு நாள் மாற்று வழிகளை தெரிவுசெய்யும் நிலை உருவாகியுள்ளது என்பதனை அந்த புள்ளி விவரங்கள் உறுதிப்படுத்துகின்றன.

இந்த நிலைமையை மாற்றி வினைத்திறன் வாய்ந்ததும் முறையானதுமான பொதுப் போக்குவரத்து சேவையை நாட்டில் ஏற்படுத்துவது தொடர்பாக இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.

அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, பிரதி அமைச்சர் லசந்த அழகியவன்ன ஆகியோர் உள்ளிட்ட அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# ஐ.தே.கட்சியுடனான மைத்திரியின் அதிருப்தி அதிகரித்து வருகின்றது

## சுசில் பிரேம்ஜயந்த தெரிவிப்பு



ஐக்கிய தேசியக் கட்சியுடனான கூட்டிணைவில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அதிருப்தி நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது என அரசிலிருந்து வெளியேறிய ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் சுசில் பிரேம்ஜயந்த தெரிவித் துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டு எதிரணியின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

பிரதமர் நாட்டில் இல்லாத போது அமைச்சரவை நேற்று முன்தினம் ஜனாதிபதியால் அவசரமாக கூட்டப்பட்டதும் அதிருப்தியின் ஒரு வெளிப்பாடே ஆகும்.

இந்த அரசு ஜனாதிபதிக்கு எதிராக, ஜனாதிபதியை மீறி செயற்பட்டுக் கொண்டு செல்கின்றது. முப்படைகளின் தளபதி என்ற ரீதியில் ஜனாதிபதிக்கு பல விடயங்கள் அறிவிக்கப்படுவதில்லை.

அத்துடன், முக்கியமான முடிவுகள் பற்றி எவரும் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்துவதில்லையென்ற குறையும் ஜனாதிபதிக்குள் இருக்கின்றது.

அண்மையில் அடுத்த பிரதமர் யாராக இருக்க வேண்டும் என ஜனாதிபதி கூட்டமொன்றில் கருத்துத் தெரிவித்திருந்தார். அவ்வாறு பிரதமராக வருபவர் ஊழல் மோசடிகள் அற்ற, தேசிய உணர்வுகளை மதிக்கும் ஒருவராக இருக்க வேண்டும் எனவும் கூறியிருந்தார்.

ஜனாதிபதியின் இந்தக் கருத்துக்கள் யாரைப் பற்றியதாக இருக்கின்றது என்பதை யாரும் விளங்கிக் கொள்ள முடியும். மத்திய வங்கி ஊழல் மோசடியைத் தான் ஜனாதிபதி இங்கு சுட்டிக்காட்டியிருந்தார் எனவும் சுசில் பிரேம்ஜயந்த எம்.பி. மேலும் கூறியுள்ளார்.

# ரணிலும், மஹிந்தவும் நாடு திரும்பினார்கள்!



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் நேற்றுமுன்தினம் இரவு நாடு வந்து சேர்ந்துள்ளனர்.

மூன்று நாள்கள் விஜயம் மேற்கொண்டு கடந்த 10 ஆம் திகதி வியட்நாமுக்கு பயணித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வியட்நாமின், ஹனோய் நகரில் இடம்பெற்ற ஆசிய சர்வதேச பொருளாதார மாநாட்டில் கலந்துகொண்டு நாடு திரும்பியுள்ளார்.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர்களுள் ஒருவரான சுப்பிரமணியன் சுவாமியின் அழைப்பினை ஏற்று கடந்த 10 ஆம் திகதி இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டார்.

தனது விஜயத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்ட மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

# கோட்டாபய போட்டியிட்டால் கட்டுப்பணம் என்னுடையது!



பொன்சேகா கூறுகிறார்

மஹிந்த குடும்பத்தில் கோட்டாபய ராஜபக்ஷ போட்டியிடுகிறார் என்றால், அவருக்கான வேட்பாளர் கட்டுப்பணத்தை தானே கட்டுவேன் என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவில் வைத்து தன்னுடைய குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரே அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக வருவார் எனத் தெரிவித்திருந்தமை குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்டால், தங்களது கட்சி அவருடன் போட்டியிட தயாரா? என ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பியதற்கு –

தமது கட்சியின் தலைவர் பொருத்தமான ஒருவரை வேட்பாளராக நிறுத்துவார் என்றிருந்தால், கோட்டாவை வெற்றி கொள்வது சிரமமானதல்ல எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# முத்துராஜவெல எண்ணெய்க் கசிவு; விசாரணைக்காக விசேட குழு!



கடலிலிருந்து முத்துராஜவெல எரிபொருள் களஞ்சியத்திற்கு எரிபொருள் கொண்டு செல்லப்பட்ட குழாயில் ஏற்பட்ட கசிவு தொடர்பில் விசாரணை செய்வதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து இலங்கைக்கு எரிபொருள் கொண்டுவரப்பட்ட கப்பலிலிருந்து அவை இறக்கப்படும் சந்தர்ப்பத்தில், குழாயில் கசிவு ஏற்பட்டது இதனையடுத்து உஷ்வெட்டகெய்யாவ முதல் பமுனுகம வரையான கடற் பகுதிகளில் தொன் கணக்கான எண்ணெய் கடலில் கலந்தது.

இந் நிலையிலேயே பல்வேறு நிறுவனங்களை சேர்ந்த பிரதிநிதிகளைக் கொண்ட விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்த பெற்றோலிய வளத்துறை அமைச்சின் செயலாளர் உபாலி மாரசிங்க, அந்தக் குழுவின் அறிக்கையை இரண்டு வார காலத்திற்குள் பெற்றுக்கொள்ளத் தீர்மானித்துள்ளோம் எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எண்ணெய் கலந்து கடற்பரப்பில் மேற்கொள்ளப்பட்டு வந்த துப்புரவு பணிகள் 70 சதவீதம் பூர்த்தியடைந்துள்ள நிலையில், துப்புரவு பணிகள் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(கு)

# சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்கள் நியமனம்!



அம்பாந்தோட்டை மாவட்டத்தின் பெலியத்த தொகுதிக்கான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் புதிய அமைப்பாளராக சட்டத்தரணி உபாலி மொஹொட்டி நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியிடமிருந்து அவர் நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டார்.

அதேவேளை, அம்பாந்தோட்டை மாவட்டத்தின் முல்கிரிகல தொகுதிக்கான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் புதிய அமைப்பாளராக எச்.டபிள்யு.குணசேன நியமிக்கப்பட்டுள்ளார். அவரும் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதியிடமிருந்து நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டார்.






வரலாற்று சிறப்புமிக்க புதூர் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய 108 அடி நவதள இராஜகோபுரத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வின் சில பதிவுகள்.

அடிக்கல் நடுகை விழாவில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடமாகாண சபை உறுப்பினர் ப.சத்தியலிங்கம், ம.தியாகராசா, மற்றும் ஆலய நிர்வாகிகள், பத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ - 100)



பாடசாலை மாணவர்களுக்கிடையிலான தேசிய மட்ட கபடிப்போட்டியில் கிளிநொச்சி சிவநகர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் 17 வயதுப் பெண்கள் அணி முதலிடத்தைப்பெற்று தங்கப்பதக்கத்தையும், 20 வயதுப் பெண்கள் அணி மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தையும் சுவீகரித்திருப்பது அளப்பெரும் சாதனையாகும்.

இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டுக்குப்பின்னர் கபடி என்றால் சிவநகர் தான் என்கின்ற பெயரை கிளிநொச்சி மாவட்டத்தில் நிலைநாட்டிய இப்பாடசாலை மாணவர்கள் பதினைந்து ஆண்டுகளைக் கடந்து அதே பெயரை தேசிய ரீதியில் நிலைநாட்டி எமது மாவட்டத்திற்கும், வடக்கு மாகாணத்திற்கும் கௌரவத்தைத் தேடித்தந்திருக்கின்றமை வரலாற்றுப் பதிவாகும்.

கோட்டம், மாவட்டம், மாகாணம் என்ற படிநிலைகளைத் தாண்டி எமது மாணவர்கள் தேசிய மட்ட போட்டிகளில் பங்குபற்றுவதே சவால் நிறைந்த விடயமாக இருக்கின்ற நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் பொருளாதார நெருக்கடி நிறைந்த உருத்திரபுரம், சிவநகர் பகுதியில் அமைந்துள்ள கிராமப்புற பாடசாலையின் மகளிர் அணி இவ்வருடம் நடைபெற்ற கிரீடா சக்தி தேசிய மட்ட கபடி போட்டியில் 2ஆம் இடத்தைப் பெற்றிருந்ததோடு அண்மையில் நடைபெற்ற பாடசாலை மாணவர்களுக்கான தேசிய மட்ட கபடிப் போட்டியில் - மகாவலி தேசிய பாடசாலை - அணியை வீழ்த்தி வெற்றி வாகை சூடியிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

பௌதீக வளத்தேவைகளோடு பயிற்சிகளை மேற்கொள்வதற்கான நவீன வசதிகளுடன் கூடிய மைதானம் கூட இல்லாத நிலையில், வறுமையும், வலிகளும் எமது திறமைக்குத் தடையல்ல என்பதை நிரூபித்து - கபடி என்றால் சிவநகர் - தான் என்ற மகுடத்தை மீண்டுமொருமுறை தேசிய ரீதியில் நிலைநாட்டியுள்ள வீராங்கனைகள், பயிற்றுவிப்பாளர்கள், பெற்றோர்கள், பாடசாலைச் சமூகத்தினர் அனைவருக்கும் பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

தேசிய ரீதியில் தங்கம், மற்றும் வெண்கலப்பதக்கம் வென்ற சிவநகர் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவிகளுக்கு நேரில் சென்று வாழ்த்துத்தெரிவிக்கும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

# கிளிநொச்சி மக்களுக்கு நட்டஈடு




யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நட்டஈடுகள் கிளிநொசியில் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணியளவில் கிளிநாச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில் இடம்பெற்றது. நாட்டில் நிலவிய யுத்தத்தினால் சேதமாக்கட்டப்பட்ட ஆலயங்கள் மற்றும் உறவுகளை இழந்தோர், அங்கங்களை இழந்தோர் மற்றும் சொத்துக்களை இழந்தோருக்கான நட்டஈட்டு காசோலைகள் ஒரு தொகுதியினருக்கு வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 252 பேருக்கு 2கோடியே 14 இலட்சத்து 65 ஆயிரத்து 990 ரூபாவுக்கான காசோலைகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் காதர் மஸ்தான், புனர்வாழ்வு அதிகார சபை தலைவர் அன்னலிங்கம், அமைச்சின் செயலாளர், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (இ - 70)



வடக்கு மாகாணசபை உறுப்பினர் என். விந்தன் கனகரட்ணம் தனது 2018 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டின் மூலம் அரியாலை நாவலடி முதலாம் குறுக்கு அம்மன் வீதி ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய புனரமைப்புப் பணிக்காக ரூபா எழுபத்தைத்து ஆயிரம் வழங்கினார்.

மேற்படி ஆலய நிர்வாகத்தினர், பொது மக்கள் அனைவரினதும் கோரிக்கைக்கு அமைவாக நேரில் சென்று பார்வையிட்ட என். விந்தன் கனகரட்ணம், அரியாலை நாவலடி முதலாம் குறுக்கு அம்மன்வீதி ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய புனரமைப்புப் பணிக்காக ரூபா எழுபத்து ஐந்து ஆயிரம் பெறுமதியான காசோலையை கடந்த 13ஆம் திகதி தமிழத் தேசியக் கூட்டமைப்பின் நல்லூர் பிரதேச சபை உபதவிசாளர் ஆர். ஜெயகரன் ஊடாக வழங்கினார்.

இந்நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி. அன்ரன் யோகநாயகம் எழிலரசி, நல்லூர் பிரதேச கலாசார உத்தியோகத்தர் விஜிதா ஆகியோரும் கலந்துகொண்டனர். (இ

மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலமான தெரிவுகள் மூலம் மாகாண முகாமைத்துவ உதவியாளர்கள் பதவிக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முதலமைச்சர் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ. விக்னேஸ்வரன் உரையாற்றினார். அந்த உரை இங்கு பிரசுரமாகியுள்ளது.

# அரச நியமனம் பெறும் நீங்கள்

# மக்களைக் காத்திருக்க வைத்துப் பழகாதீர்கள்!

வடமாகாணசபையின் ஆட்சிக்குட்பட்ட திணைக்களங்கள், அமைச்சுக்கள் ஆகியவற்றில் காணப்பட்ட முகாமைத்துவ உதவியாளர் மொத்த வெற்றிடங்கள் 171ல் 70வீதமான நியமனங்கள் திறந்த போட்டிப் பரீட்சை மூலமாகவும், 30வீதமான வெற்றிடங்கள் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகள் மூலமாகவும் தெரிவு செய்யப்பட்டு திறந்த போட்டிப் பரீட்சை மூலமான தெரிவுகளில் 110 பேருக்கு 17.08.2018ல் நியமனங்கள் வழங்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேற்று வெட்டுப்புள்ளியாக 110 புள்ளிகள் என வரையறுக்கப்பட்டு இந் நியமனங்களை பெறுவதற்கு 51 பேர் தகைமை பெற்றிருக்கின்றமை மகிழ்வைத் தருகிறது.

இதுவரை காலமும் காரியாலய உதவியாளர்கள் தரங்களிலோ அல்லது சாரதியப் பணிகளோ கடமையாற்றி இன்று நியமனம் பெறுகின்ற நீங்கள் 51பேரும் இன்றில் இருந்து உத்தியோகத்தர்களாக நியமனம் பெற்றுள்ளீர்கள் என்பதை மனத்தில் இருத்தி கடமைகளை ஆற்றப் பழகிக் கொள்ள வேண்டும்.

நீங்கள் உத்தியோகத்தர்களாக மாற்றப்பட்டுவிட்டமையால் சிற்றூழியர் தரங்களில் உள்ள உங்கள் நண்பர்களையும் மற்றும் தெரிந்தவர்களையும் தூரத்தள்ளி வைக்க வேண்டும் என்பது கருத்தல்ல. மாறாக அவர்களையும் இணைத்துக் கொண்டு உங்களுக்குத் தரப்பட்ட கடமைகளையும் பொறுப்புக்களையும் நன்கு புரிந்து கொண்டு உங்கள் பணிகளை ஆற்ற முன்வரவேண்டும். மேலும் இப் போட்டிப் பரீட்சைகள் மூலம் நீங்கள் உங்கள் திறமைகளை வெளிப்படுத்தி முகாமைத்துவ உதவியாளர்களாக வந்திருக்கின்ற நிலையில் உங்கள் கற்றல்நடவடிக்கைகள் இத்துடன் முடிந்துவிட்டன என அர்த்தம் இல்லை. மாறாக நீங்கள் தினமும் உங்கள் உத்தியோக பூர்வ மேம்பாட்டில் ஊக்கம் கொண்டவர்களாக காரியாலய வழிகாட்டி நூல்களையும் அறிக்கைகளையும் நிதி, நிர்வாக பிரமாணக் குறிப்புப் புத்தகங்களையும் தினமும் வாசித்து புதிய புதிய விடயங்களைக் கற்றுக்கொள்ள ஆர்வம் கொண்டிருக்க வேண்டும். நீங்கள் ஒவ்வொருவரும் சிறந்த முகாமைத்துவ உதவியாளர்களாக மிளிர வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

### அரச நியமனம் என்பது இறையருளால் கிடைப்பது

அரச நியமனம் என்பது பொது மக்களுக்கு சேவையாற்றுவதற்காக இறையருளால் வழங்கப்பட்ட ஒரு சந்தர்ப்பம். இதை மனத்தில் இருத்தி சேவைகளை ஆற்ற நீங்கள் பழகிக் கொள்ள வேண்டும். உங்களிடம் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காகப் பல பொது மக்கள் அலுவலகத்திற்கு வந்து அங்குள்ள கதிரைகளில் காத்திருக்க, நீங்கள் உங்கள் நண்பர்களுடன் அல்லது தொலைபேசியில் நீண்டநேரம் தேவையற்ற உரையாடல்களை வளர்த்துக் கொண்டு அவர்களைக் காத்திருக்க வைக்கின்ற பழக்கங்களை விலக்கிக் கொள்ள வேண்டும். அவர்களுள் பலர் அதிகாலையில் எழுந்து தூர பிரதேசங்களில் இருந்து ஆவலுடன் எதிர்பார்த்து வந்தவர்கள். அவர்களை மக்களாகப் பார்க்க நீங்கள் பழகிக் கொள்ள வேண்டும். சாதிய வழியில், வர்க்க வழியில், வம்ச வழியில் மக்களைப் பார்க்கும் ஒரு பழக்கம் இங்கு வேரூன்றி விட்டது. இதை நாங்கள் மாற்ற வேண்டும். அரச அலுவலர்களாக நாங்கள் பரிமாணம் பெற்றபின்இவ்வாறானஎண்ணங்களுக்கு இடம் கொடுக்கக் கூடாது. மக்கள் சேவையைமகேஸ்வரன்சேவையாகவே கணித்து நாங்கள் நடந்து கொள்ள வேண்டும்.

### கதிரை அமரச் செய்து மதிப்புடன் நடந்துங்கள்

பொது மக்களை அதிக நேரம் காத்திருக்க வைக்காமல் அவர்களின் சேவைகளை உடனுக்குடன் நிறைவு செய்து அனுப்பக்கூடியதாக நாம் பழகிக் கொள்ள வேண்டும். உங்களிடம் சேவைகளைப் பெற வரும் பொதுமக்களைக் கதிரைகளில் அமரச்செய்து அவர்களின் தேவைகளைக் கேட்டறிந்து அவற்றை விரைந்து பூர்த்தி செய்து

அனுப்புவது காலக்கிரமத்தில் பொது மக்கள் மனதில் எம் மீது ஒரு நல்ல அபிப்பிராயத்தை உருவாக்க இடமளிக்கும்.



## நண்பர்களுடனோ, தொலைபேசியிலோ நீண்ட நேர உரையாடலை தவிருங்கள்!!

ஒவ்வொரு நாளும் கடமை முடிந்து வீடு சென்றதும் இன்று எத்தனை பொது மக்களுக்கு தன்னலமற்ற சேவைகளை வழங்கியிருக்கின்றோம், எத்தனை தரம் தாமதமாகக் கடமைகளை நிறைவேற்றியிருக்கின்றோம் என எண்ணுவீர்களாயின் உங்களை நீங்களே மதிப்பிட்டு அடுத்த நாள் கூடிய திறனுடன் சேவை வழங்க அந்த மதிப்பீடு இடமளிக்கும்.

முன்னைய காலங்களைப்போல் அல்லாது தற்போது உங்கள் நியமனங்கள் உங்கள் வீட்டிற்கருகாமையில் அல்லது வீட்டில் இருந்து தினமும் பிரயாணம் செய்து திரும்பக்கூடியளவு தூரத்தில் கிடைக்கின்றன. எனவே உங்களிடம் சேவைகளைப்பெற வருபவர்கள் உங்கள் நண்பர்களாகவோ அல்லது உறவினர்களாகவோ அல்லது தெரிந்தவர்களாகவோ இருப்பார்கள். இவர் தெரிந்தவர், இவர் நண்பர், இவர் உறவினர் என்ற வேறுபாடின்றி அனைவருக்கும்திணைக்கள நடைமுறைமைக்கு அமைய பாரபட்சமின்றி கடமைகளை ஆற்ற பழகிக் கொள்ள வேண்டும். சிங்கப்பூர், யப்பான் ஆகிய நாடுகளின் அரச அலுவலர்கள் பக்கச்சார்பின்றி திறமையுடன் செயலாற்றுபவர்கள் என்று பெயர் எடுத்துள்ளார்கள். அவர்களின் அவ்வாறான சேவை தான் அந்த இரு நாடுகளையும் பொருளாதார விருத்தியில் உச்சக் கட்டத்திற்குக் கொண்டுபோயுள்ளது.

இன்று சாதாரணமாக வருடாந்த இடமாற்றங்களில் கூட எத்தனையோ முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன. தமக்குத் தெரிந்தவருக்கு தமது உறவினருக்கு அண்மையில் உள்ள நிலையங்களைக் கொடுத்துவிட்டு ஏனையவர்களுக்கு வன்னிப் பிரதேசங்களிலும் மற்றும் அதி கஷ்டப் பிரதேசங்களிலும் மாற்றங்களை அல்லது நியமனங்களை வழங்குவது பற்றி முறையிடப்படுகின்றது. விசாரித்துப் பார்த்தால் அந்த முறைப்பாடுகளில் உண்மை இருக்கத்தான் செய்கின்றன.

### சட்டத்திற்கு அமைவாக நடக்கப் பழகிக்கொள்ளுங்கள்

இவை தொடர்பாக ஒரு சீரிய முறையைக் கடைப்பிடிப்பதற்காகவே சட்டம் பற்றிய கைநூல்களும் ஒழுங்கு விதிகளும் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் கூறப்பட்டிருப்பனவற்றை முறையாகக் கடைப்பிடிப்பீர்களோயாயின் இவ்வாறான முறைப்பாடுகள் எழுவதற்கு இடமிருக்கா. சட்டத்திற்கு அமைவாக நடக்கப் பழகிக் கொள்ளுங்கள். ஆனால் மக்கள் நலனுக்காக சட்டங்களைப் பாவிக்கவும் கற்றுக் கொள்ளுங்கள். அவர்களைத் துன்புறுத்த சட்டத்தைப் பாவிக்காதீர்கள்.

இன்று புதிய நியமனங்களைப் பெறுகின்ற உங்கள் அனைவரையும் வாழ்த்தி கௌரவிக்கின்றேன். எதிர்காலத்தில் நீங்கள் அனைவரும் வெறும் பணியாளர்களாக அல்லாமல் சிறந்த மக்கள் சேவையாளர்களாகப் பரிணமிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டு எனது உரையை இந்த அளவில் நிறைவு செய்கின்றேன். *

# இலங்கையில் தயாரிக்கப்பட்ட தீயணைப்பு படகு

ஆழ்கடலில் தீ விபத்துக்கு உள்ளாகும் கப்பல், படகுகள் போன்றவற்றை உடனடியாக நெருங்கி தீயை கட்டுப்படுத்துவதற்காக இலங்கையில் தயாரிக்கப்பட்ட முதலாவது உடனடியாக செயற்படக் கூடிய தீயணைப்பு படகொன்றின் வெள்ளோட்டம் இடம்பெற்றுள்ளது.

இராஜாங்க அமைச்சர் திலிப் வெதஆரச்சியின் தலைமையில் திக்கோவிட்ட மீன்பிடி துறைமுகத்தில் இது தொடர்பான நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

சோலோ மெரின் லங்கா நிறுவனத்தினால் இது தயாரிக்கப்பட்டுள்ளது. மணித்தியாலத்திற்கு 35 கடல் மைல் வேகத்தில் செயல்படக்கூடியது. மணித்தியாலத்திற்கு 6 இலட்சம் லீற்றர் தண்ணியை 120 மீற்றர் தூரத்திற்கு பீச்சியடிக்கக் கூடிய வசதிகளைக் கொண்டுள்ளது.

தரையில் இருந்து 200 கடல் மைல் தூரத்திற்கு தீயை அணைக்கக்கூடிய வசதிகளை கொண்டுள்ளது. இதேபோன்று மீண்டும் தரையை வந்தடையக் கூடிய வசதிகளையும் கொண்டுள்ளது.

BELUGA - 18 என்ற இந்த தீயணைப்புப் படகு 6 பணியாளர்களுடன் செயற்படக்கூடிய வசதிகளும் உண்டு. இவர்களுக்கு கடலில் இடம்பெறும் தீ சம்பவங்களை கட்டுப்படுத்தக்கூடிய பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன.

எரிபொருள் போன்றவற்றினால் தீ சம்பவங்களுக்கு உள்ளாகும் கப்பல் அல்லது படகுகளின் தீயை கட்டுப்படுத்துவதற்கு தேவையான 8000 லீட்டர் இரசாயனத்தையும் இந்த தீயணைப்புப் படகு கொண்டுள்ளது.

தீயணைப்புச் சம்பவம் தொடர்பான தகவல் கிடைக்கப்பெற்றவுடன் உடனடியாக சம்பந்தப்பட்ட இடத்தை அடையக் கூடிய தொழிநுட்ப வசதியையும் இது கொண்டுள்ளது.



# கிணற்றில் விழுந்த நரி!



காட்டில் புதருக்கு இடையில் ஒருபெரியகிணறு இருந்தது. புதர் மறைத்திருந்ததால் கிணறு இருப்பது சட்டென்று தெரியாது. மரத்தில் தாவிக்கொண்டே வந்த குரங்கு ஒன்று, தவறி கிணற்றுக் குள் விழுந்து விட்டது. தண்ணீர் குறைவாக இருந்த தால் தத்தளித்துக்கொண்டே, யாராவது உதவுங்கள் என்று கத்தியது.

கிணற்றுக்குள் இருந்து வந்த குரல் வெளியே இருந்த விலங்குகளுக்குக் கேட்கவில்லை.

நம்பிக்கை இழந்த குரங்கு, இனி உயிர் பிழைக்க வாய்ப்பில்லை என்று நினைத்து கண்ணீர் விட்டது.

குழந்தையே, பயப்படாதே. நான் இந்தக் கிணற்றின் தேவதை. உன்னைக் காப்பாற்றுவது என் கடமை. அதற்கு முன் நீ ஏதாவது ஒரு நன்மை செய்வதாகச் சத்தியம் செய்து தரவேண்டும். காப்பாற்றிய பின்னர் சத்தியத்தைத் தவறினால், உனக்குக் கெடுதல் நடக்கும் என்றது தேவதை.



தேவதையே, நீங்கள் என்னைக் காப்பாற்றினால் மீண்டும் இந்தக் கிணற்றில் யாரும் விழுந்துவிடாதபடி புதரைச் சுத்தம் செய்துவிடுவேன் என்றது குரங்கு.

குரங்கின் பதிலால் மகிழ்ந்த தேவதை, இரு கைகளால் குரங்கைத் தூக்கி வெளியே விட்டது. வெளியே வந்த குரங்கு, கிணற்றைச் சுற்றியிருந்த புதரை நண்பர்களுடன் சேர்ந்து சுத்தம் செய்தது. இப்போதுகிணறுநன்றாகவெளியேதெரிந்தது.

சில நாள்களுக்குப் பிறகு ஒரு மான் குட்டி, கிணற்றுக்குள் விழுந்துவிட்டது.

மானின் அழுகுரலைக் கேட்ட தேவதை, குரங்கு சுத்தம் செய்த பிறகு கிணறு நன்றாகத் தெரிகிறதே! பிறகு எப்படி விழுந்தாய்? என்று கேட்டது.

குரங்கு நண்பன் கிணற்றுக்குள் ஒரு தேவதை வசிப்பதாகச் சொன்னான். உங்களைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலில் எட்டிப் பார்க்கும்போது தவறி விழுந்துவிட்டேன். என்னைக் காப்பாற்றுங்கள் தேவதை என்று கெஞ்சியது மான் குட்டி.

தெரியாமல் விழுந்ததால் உன்னைக் காப்பாற்றுகிறேன். இனிமேல் யார் விழுந்தாலும் நான் காப்பாற்ற மாட்டேன். வெளியே சென்ற பிறகு என்ன நன்மை செய்வாய்? என்று சற்றுக் கண்டிப்போடு கேட்டது தேவதை.

நீங்கள் சொன்ன எச்சரிக்கையைக் காட்டில் உள்ள அனைத்து விலங்குகளிடமும் சொல்லி, அவர்களைக் கிணற்றுப் பக்கம் வரவிடாமல் தடுத்து விடுவேன் என்றது மான் குட்டி.

மகிழ்ச்சி அடைந்த தேவதை, உன் எண்ணம் எனக்குத் திருப்தியளிக்கிறது. உன்னைக் காப்பாற்றுகிறேன். நீ சொன்னதைச் செய்யா விட்டால் உனக்கு ஏதாவது கெடுதல் ஏற்படும் என்று சொல்லிவிட்டு, மான் குட்டியை வெளியில் கொண்டுவந்து விட்டது.

குரங்கைப்போலவே மான் குட்டியும் தேவதைக்கு வாக்குக் கொடுத்தபடி, அனைத்து விலங்குகளிடமும் எச்சரிக்கையைத் தெரிவித்தது.

அதைக்கேட்ட விலங்குகள் கிணற்றுக்கு அருகில் செல்வதைக் கூடத் தவிர்த்தன. ஆனால் நரிக்கு மட்டும் குரங்கும் மான் குட்டியும் சொல்வதில் நம்பிக்கை இல்லை. இவர்கள் சொல்வது பொய் என்பதை நிரூபித்துக் காட்ட வேண்டும் என்று எண்ணியது.

குரங்கையும் மான் குட்டியையும் அழைத்துக்கொண்டு கிணற்றுக்கு அருகே வந்தது.

கிணற்று தேவதையே, இவர்கள் சொல்வது உண்மை என்றால் என் முன்னே வந்து நில் என்று கத்தியது.

கிணற்றில் எந்தவிதச் சலனமும் இல்லை.

இருவரும் பொய் சொல்றீங்க? நான் இப்போதே கிணற்றில் குதித்து, மேலே வருகிறேன் பாருங்கள் என்று சொல்லிக்கொண்டே குதித்துவிட்டது நரி.

மேலே வருவதற்கு முயற்சி செய்தது. ஆனால் முடியவில்லை. தண்ணீரில் தத்தளித்துக்கொண்டிருந்தது.

ஐயோ! வீம்பாகப் பேசி இப்படி மாற்றிக்கொண்டேனே& என்னை யாராவது காப்பாற்றுங்கள் என்று அலறியது நரி.

சற்று நேரத்தில் தேவதை வந்தது. மற்றவர்கள் விடுத்த எச்சரிக்கையைக் கேட்காமல் வேண்டுமென்றே குதித்த உன்னை ஏன் காப்பாற்ற வேண்டும்? உன்னைக் காப்பாற்றினாலும் நல்லது செய்வாய் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. உன்னை நீயே காப்பாற்றிக் கொள் என்று சொல்லிவிட்டு, தேவதை மறைந்தது. நரி கதறியது.

குரங்கும் மான் குட்டியும் யானையை அழைத்து வந்தன. அருகிலிருந்த ஒரு மரக்கிளையை ஒடித்து கிணற்றுக்குள் வீசியது யானை. அதைப் பிடித்துக் கொண்டு மேலே வந்து சேர்ந்தது நரி.

உங்கள் மூவருக்கும் நன்றி. இனி இந்தக் கிணற்றுப் பக்கம் வர மாட்டேன் என்று சொல்லிவிட்டு ஓட்டம் பிடித்தது நரி.

# இது எந்த நாடு?



## சுத்தமான கடற்கரைகளின் நாடு

கீழே உள்ள 10 குறிப்புகள் ஒரு குறிப்பிட்ட நாட்டைக் குறிக்கின்றன. அது எந்த நாடு என்பதைக் கண்டு பிடியுங்கள்.

1. மத்தியதரைக் கடலுக்குக் கிழக்குப் பகுதியில் உள்ள ஒரு தீவு நாடு.
2. துருக்கி இந்த நாட்டைத் தனது பகுதி என்று கூறியது உண்டு. பின்னர் தனி நாடாக ஏற்றுக்கொண்டது.
3. இதன் தலைநகரம் நிக்கோசியா. ஆட்சி மொழிகள் கிரேக்கம், துருக்கியம்.
4. ஐரோப்பாவின் மிகச் சுத்தமான கடற்கரைகள் இங்குள்ளன.
5. செம்பு, கல்நார், ஜிப்சம், மரம், உப்பு, மார்பிள் போன்றவை இயற்கை வளங்கள்.
6. எலுமிச்சை, பார்லி, திராட்சை, காய்கறிகள் அதிகம் விளைகின்றன.
7. சுற்றுலாவும் துணி ஏற்றுமதியும் முக்கியத் தொழில்கள்.
8. தேசியக் கொடியிலேயே இந்த நாட்டின் வரைபடமும் இருக்கிறது.
9. மிகக் குறைவான குற்றங்களே நடைபெறுவதால், உலகின் பாதுகாப்பான நாடுகளில் இதுவும் ஒன்று.
10. இங்குள்ள பாபோஸ் நகரத்தையே உலகப் பாரம்பரியச் சின்னமாக அறிவித்திருக்கிறது யுனெஸ்கோ .

விடை: சைப்ரஸ்

# ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்கு எவ்வளவு கலோரி உணவு தேவை?



சாப்பிடும் உணவு வகைகளில் உள்ள புரதம், கொழுப்பு, கார்போஹைட்ரேட் ஆகியவைதான் நம் உடலுக்குத் தேவையான சக்தியைக் கொடுக்கின்றன. இந்த சக்திதான் கலோரியில் கணக்கிடப்படுகிறது.

இதன் மூலம் உடலில் சேமித்துவைத்திருக்கும் சக்தி, நாம் செய்யும் வேலைகளுக்குத் தக்கவாறு செலவு செய்யப்படுகிறது. கடின உழைப்பாளிகள், கூடுதல் கலோரிகள் தரக்கூடிய உணவுமுறையைக் கையாள வேண்டும். ஆஃபீஸ் வேலை போன்ற உடலை வருத்தாமல்வேலைகள் செய்பவர்களுக்கு, சற்று குறைந்த அளவு கலோரிகள் தரக்கூடிய உணவுப் பொருள்கள் தேவைப்படும்.

### எந்தெந்த உணவில் எவ்வளவு கலோரி?

வயது, பாலினம், எடை, உயரம், உடல் உழைப்பு ஆகியவற்றைப் பொறுத்து தேவைப்படும் கலோரி அளவு மாறுபடும். ஒவ்வொரு உணவு வகைக்கும் கலோரி அளவு உண்டு. உதாரணத்துக்கு 100 கிராம் எடைகொண்ட அப்பிளில் 59 கலோரி இருக்கும். வாழைப்பழத்தில் 116 கலோரி, 300 கிராம் சாதத்தில் 346 கலோரிகள் கிடைக்கின்றன.




எண்ணெய், முந்திரிப் பருப்பு போன்ற நட்ஸ் மற்றும் தானியவகைகளில் கலோரிகள் அதிகமாக உள்ளன. 100 கிராம் நட்ஸில் 550 முதல் 600 கலோரிகள் கிடைக்கும். அதேபோல 100 கிராம் எண்ணெயில் 900 கலோரிகள், 100 கிராம் சமைத்த பருப்பில் 339 கலோரிகள் இருக்கும். காய்கறிகளில்தான் குறைவான கலோரிகள் இருக்கும். உதாரணமாக 100 கிராம் காய்கறியில் 40 கலோரி. நம் உடல் எடை கூடுவதற்கும் குறைவதற்கும் இந்த கலோரிகள் தான் காரணம்.

### எந்த வயதில் எவ்வளவு கலோரி தேவை...

வயதுக்கு ஏற்றவாறு உணவு தேவைப்படும். உதாரணத்துக்கு 3 அல்லது 4 வயது என்றால் ஒரு தோசை சாப்பிடுவார்கள். அதுவே ஏழு வயது இருப்பவர்களுக்கு இரண்டு தோசை தேவைப்படும். இப்படி வளர்ச்சிக்கு ஏற்றவாறு உணவின் அளவு மாறுபடும். குறிப்பாக 14 வயது முதல் வளர்ச்சி நிலை என்பதால், ஊட்டச்சத்துக்கள் நிறைந்த உணவுவகைகளைச் சாப்பிடுவது நல்லது.

### உழைப்புக்கு ஏற்றவாறு கலோரிகள் தேவை:

மனிதன் செய்யும் வேலைக்கு ஏற்றவாறு கலோரிகள் எரிக்கப்படுகின்றன. உதாரணத்துக்கு, ஒரு குடும்பப் பெண் பாத்திரம் துலக்குவது, துணி துவைப்பது என ஒரு மணி நேரம் வீட்டு வேலைகளைச் செய்தால், 120 கலோரி செலவாகும். ஆனால், ஒரு ஆண் ஓர் மணி நேரம் ஓட்ட நடையாகச் செல்லும்போது, 470 கலோரிகள் செலவாகும். அலுவலக வேலை, கடினமான வேலை என பல விதமான வேலைகளைச் செய்து வருகிறோம். இதில், ஆணுக்கும் பெண்ணுக்கும் தேவைப்படும் கலோரிகளின் அளவு வித்தியாசப்படும். எனவே அவரவர் வேலை அளவுக்கும் உடல் எடைக்கும் ஏற்றவாறு உணவை உட்கொள்ள வேண்டும்.

# வலி.கிழக்கில் புகைத்தல் மட்டுமின்றி புகையிலைப் பாவனைக்கும் தடை!

## பிரதேச சபையில் பிரேரணை நிறைவேற்றம்

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக் குட்பட்ட பகுதிகளில் புகைத்தல் மற்றும் புகையிலைப் பாவனையை தடை செய்வது தொடர்பான தீர்மானம் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக் குட்பட்ட பகுதிகளில் புகைத்தல் மற்றும் புகையிலைப் பாவனையை தடை செய்வது தொடர்பாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் இராமநாதன் ஐங்கரனால் இந்த பிரேரணை சபையில் முன்வைக்கப்பட்டது.

சபையின் விவாதத்திற்கு வந்த இந்தப் பிரேரணை அதிகப்படியான உறுப்பினர்களின் ஆதரவுடன் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் அதிகளவான சனத்தொகையைக் கொண்டுள்ள யாழ்ப்பாண மாவட்டத்தில் புகைப் பொருள் மற்றும் மதுசாரப் பாவனை பெரும் பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளமை அனைவரும் அறிந்த விடயமே. அதன் தாக்கம் மேலும் அதிகரித்து தற்போது கஞ்சா, ஹெரோயின் போன்ற போதைப்பொருள்களையும் பாவனை செய்யும் அளவிற்கு எமது இளைஞர் சமூகம் ஏமாற்றப்பட்டுள்ளது.

உற்பத்தி நிறுவனங்கள் சிறுவர்களை இலக்கு வைத்து இவ்வாறான வியாபாரங்களை முன்னெடுக்கின்றமையால், சிறுவர்கள் அதிகமாக நடமாடும் பகுதிகளில் இவ்வியாபாரம் முற்றாக தடை செய்தல் வேண்டும். தேசிய ரீதியில் இவ்வாறான சட்டங்களை அமுல்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டு வருவதால் எமது பிரதேசம், எமது பிரதேச மக்கள் பெரும் பிரச்சினைகளை முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

எமது மக்களின் பாதுகாப்பு, வாழ்வாதாரம், சுகாதாரம் போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக மக்களால் மக்களின் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள நாம் இப் பிரச்சினைக்கு விரைந்து தீர்வை எட்டுவது எமது கடமையாகும்.

அந்த வகையில், எமது பிரதேச சபையின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் காணப்படும் பாடசாலைகள், ஏதேனும் பதிவு செய்யப்பட்டுள்ள மத அனுஷ்டான இடங்கள், அரச வைத்தியசாலைகள், பஸ் நிலையங் கள், சிறுவர் பூங்கா மற்றும் விளையாட்டு மைதானம் போன்ற இடங்களில் இருந்து 500 மீற்றர் வரையிலான தூரத்திலுள்ள விற்பனை நிலையங்களில் சிகரெட், பீடி, சுருட்டு உட்பட ஏனைய எந்தவித மான புகையிலை சார் உற்பத்தி பொருள்கள் மற்றும் இலங்கை அரசினால் போதைப் பொருள் என அடையாளப் படுத்தப்பட்ட எந்த விதமான போதைப் பொருட்களின் விற்பனைக்குத் தடை செய்யப்பட வேண்டும்.

போதைப்பொருள்களைப் பாவித்தல் அல்லது பாவனைக்கு அனுமதித்தல் தடை செய்யப்பட்டுள்ளது. போதைப்பொருள் உற்பத்தி நிறுவனங்களினால் வழங்கப்படும் ஏதேனும் விளம்பரங்கள், பரிசுப்பொருட்கள், சான்றிதழ்கள் காட்சிப்படுத்தலானது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது என்று அந்த பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(கு)

## வெல்லவாயவில் தொற்று காய்ச்சல்: நாளொன்றுக்கு 60 பேர் பாதிப்பு

கொழும்பு, செப்.15

வெல்லவாய பிரதேச செயலகப்பிரிவில் சிறு பிள்ளைகள், பாடசாலை மாணவர்கள் மற்றும் சில வயது வந்தவர்களுக்கும் வயிற்றுப் போக்குடன் கூடிய மர்மக்காய்ச்சல் தொற்றியுள்ளது.

சுமார் ஐந்து மாத காலமாக வயிற்றுப் போக்குடன் கூடிய மர்மக் காய்ச்சல் சிறு பிள்ளைகளைத் தொற்றி வருகிறது என பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நோய் நிலைமை காரணமாக பெற்றோர் பாடசா லைகளுக்கு மாணவர்களை அனுப்பாததன் காரணமாக அப் பகுதியில் கல்வி நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ் விடயம் தொடர்பாக வெல்லவாய ஆதார வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி தெரிவிக்கையில் –

இது ஒரு வகையான வைரஸ் தொற்றுக் காய்ச்சல். சுட்டாறிய நீர், சுத்தமாக தயாரிக்கப் பட்ட வீட்டு உணவுகளை உட்கொள்ளல் போன்ற செயற்பாடுகளுடன் ஊடாக நோய் நிலையை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ள முடியும்.

மேலும், நாளொன்றுக்கு குறைந்தபட்சம் 60 நோயாளர்கள் வரை தவறாமல் சிகிச்சைக் காக வைத்தியசாலைக்கு வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஹெரோயின் கடத்தல்: பெண் உட்பட 4 பேர் கைது!

எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது ஹெரோயின் கடத்தலில் ஈடுபட்ட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த ஹெரோயின் கடத்தல் சம்பவங்கள் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளன.

மேற்படி ஹெரோயின் கடத்தல் தொடர்பாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய பல கோணங்களில் சுற்றி வளைப்புக்களை மேற்கொண்ட போதே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நான்கு சந்தேகநபர்களில் பெண் ஒருவரும் உள்ளடங்குவதுடன் 20 இற்கும் 36 வயதிற்கும் இடைப்பட்ட வயதை உடைய இளைஞர்களே மேற்படி ஹெரோயின் கடத்தலில் ஈடுபட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

## மலையக மக்களின் சம்பளப் பிரச்சினை ஜனாதிபதி ஆணைக்குழுவில் உள்வாங்கப்பட வேண்டும்: இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன்!



கொழும்பு, செப்.15

முதலாளிமார் சம்மேளனம் பெருந்தோட்ட மக்களின் சம்பள உயர்வு பிரச்சினை கோரிக்கைகளுக்கு எதிர்மாறான பதிலை தருமாயின் சம்பள உயர்வுப் பிரச்சினையில் அரசு தலையீடு செய்வதற்கு அழுத்தங்களைப் பிரயோகிப்போம் என கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு–

பெருந்தோட்ட மக்களின் சம்பள உயர்வு பிரச்சினை குறித்து எதிர்வரும் 23 ஆம் திகதி மலையக மக்கள் மேற்கொள்ளவுள்ள ஆர்ப்பாட்டம் வெற்றியாகவே அமையும்.

மாறாக முதலாளிமார் சம்மேளனம் கோரிக்கைகளுக்கு எதிர்மாறான பதிலை தருமாயின் சம்பள உயர்வுப் பிரச்சினையில் அரசு தலையீடு செய்வதற்கு அழுத்தங்களைப் பிரயோகிப்போம்.

மேலும் 1000 ருபாவுக்கு குறையாத நாள்சம்பளத்தை பெற்றுக்கொடுக்க முதலாளிமார் சம்மேளனம் ஒப்புக் கொள்ள வேண்டும்.

ஏனைய அரச திணைக்களங்களில் காணப்படும் சம்பள பிரச்சினைகளை ஆராய ஜனாதிபதி ஆணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்த ஆணைக்குழுவில் பெருந்தோட்ட மக்களின் சம்பளப் பிரச்சினை தொடர்பிலும் ஆராயப்பட வேண்டும்.

பெருந்தோட்ட தனியார் கம்பனிகளுடனான மலையக மக்களின் போராட்டங்கள் கம்பனிகளுக்கு சார்பாக அமைகின்றன. கூட்டு ஒப்பந்தத்தை மேற்கொள்ளும் முதலாளிமார் சம்மேளனம் மற்றும் தொழில் சங்கங்கள் இது தொடர்பில் கவனம் செலுத்துவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

பெருந்தோட்ட மக்களின் சம்பள பிரச்சினைக்கு அர சி ன் அழுத்தம் எவ்வாறு இருக்கப்போகின்றது என்பது தொடர்பில் விளக்கமளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

## குளவி கொட்டுக்கு இலக்காகினர் 20 மாணவர்கள்!



ஹற்றன் கல்வி வலயத்திற்குட்பட்ட மஸ்கெலியா சமன்எலிய சிங்கள மகா வித்தியாலய மாணவர்கள் 20 பேர் நேற்று மதியம் 12.30 மணியளவில் குளவி கொட்டுக்கு இலக்காகிய நிலையில் மஸ்கெலியா பிரதேச வைத்தியசாலையில் கிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பாடசாலையின் மைதானத்தில் இந்த மாணவர்கள் விளையாடிக் கொண்டிருந்த போது, அப்பகுதியில் இருந்த பெரிய கல்லின் அடிப்பகுதியில் காணப்பட்ட குளவி கூடே இவ்வாறு கலைந்து மாணவர்களை கொட்டியுள்ளது என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதன்போது குளவி கொட்டுக்கு இலக்கான மாணவர்கள் தரம் 6,7,8 வகுப்பறைகளைச் சேர்ந்த ஆண் மற்றும் பெண் பிள்ளைகள் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குளவிகொட்டுக்கு இலக்கான மாணவர்கள் தொடர்ந்தும் மஸ்கெலியா பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## இந்து அறநெறிப் பாடசாலை மாணவருக்கு யோகா வகுப்பு

யாழ்ப்பாணம், செப்.15

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட இந்து அறநெறிப் பாடசாலைகளில் யோகாசன வகுப்பு நாளை ஞாயிற்றுக்கிழமைகாலை 8.30 மணியளவில் கொழும்புத்துறை கிழக்கு சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய அறநெறிப் பாடசாலையிலும், நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பகப்பிள்ளையார் ஆலய அறநெறிப் பாடசாலையிலும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த யோகாசன வகுப்பை ஆன்மீகப் பிரசாரகரும் யோகாசனப் போதனாசிரியருமான சி.உ.மாசுதன் நடத்துகின்றார்.

## கடன் பொறி குற்றச்சாட்டில் இருந்து விடுவித்த ரணிலுக்கு சீனா வரவேற்பு!

சீனாவின் கடன் பொறிக்குள் இலங்கைசிக்கிக்கொள்ளவில்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டுள்ள கருத்தை, சீனா வரவேற்றுள்ளது.

பீஜிங்கில் நேற்று முன்தினம் நடத்திய நாளாந்த செய்தியாளர் சந்திப்பில் இதுபற்றிக் கருத்து வெளியிட்ட சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர், ஜெங் சுவாங் –

இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கருத்து வரவேற்புக்குரியது. இலங்கையை கடன் பொறியில் சிக்க வைத்து, அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனா பெற்று விட்டது என்ற 'பெயருக்கு' இது ஒரு வலுவான மறுப்பாகும்.

இலங்கைக்கான சீனாவின் உதவி, ஒருபோதும் அரசியல் சூழ்நிலைகளின் அடிப்படையிலானது அல்ல. இலங்கைக்கான நிதி மற்றும் முதலீட்டில் எந்தவொரு அரசியல் சுய ஆர்வத்தையும் சீனா கொண்டிருக்கவில்லை.

அணை மற்றும் பாதை வரம்பின் கீழான, சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான ஒத்துழைப்பு, தனியே இரண்டு நாடுகளின் மக்களுக்கும் நன்மையளிப்பது மாத்திரமல்ல,

பிராந்திய பொருளாதார அபிவிருத்தி மற்றும் இணைந்த செயற்பாட்டுக்கும் பங்களிப்பதுமாகும். என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## பஸில், கோட்டாபயவை விடவும் சிரேஷ்ட தலைவர்கள் உள்ளனர்!

### திஸ்ஸ விதாரண தெரிவிப்பு



கொழும்பு, செப்.15

பொது எதிரணியை வெற்றிப் பாதையில் கொண்டு செல்லக் கூடிய சிறந்த தலைவர்கள் உள்ளனரென லங்காசமசமாஜக்கட்சி தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

எனவே பஸில் ராஜபக்ஷ மற்றும் கோட் டாபய ராஜபக்ஷ குறித்து தற்போது தீர்மானிக்க முடியாது. கட்சியின் நிகழ்ச்சி நிரல் ஆவணங்களிலும் இதுபற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லையெனவும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக எனது சகோதரர் போட்டியிடலாம் என தெரிவித்திருந்தார்.

இது குறித்து பொது எதிரணியின் நிலைப்பாடு தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்

## எல்சல்வடார் முன்னாள் ஜனாதிபதிக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை!

### சொத்து குவிப்பு வழக்கில் தீர்ப்பு

சான்சல்வடார், செப்.15

வருமானத்துக்கு அதிகமாக சொத்து குவித்த குற்றத்துக்காக எல்சல்வடார் முன்னாள் ஜனாதிபதி ஆன்டனியோ சாகாவிற்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை அளித்து நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு வழங்கியுள்ளது.

மத்திய அமெரிக்க நாடான எல்சல்வடார் நாட்டில் 2004 - 2009 ஆம் ஆண்டுகளில் ஜனாதிபதியாக பதவி வகித்தவர், ஆன்டனியோ சாகா (வயது 53). இவர் வருமானத்துக்கு அதிகமாக சொத்து குவித்தார் என்றும் சட்டவிரோத பண பரிமாற்ற தடை சட்டத்தை மீறி செயல்பட்டார் என்றும் புகார் எழுந்தது.



இது தொடர்பாக அவர் மீது அங்கு உள்ள நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. அவர்தனது மகன் திருமணத்தின்போது 2016 ஆம் ஆண்டு ஓக்டோபர் மாதம் கைது செய்யப்பட்டார்.

வழக்கு விசாரணையின்போது, அவர் தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை ஒப்புக்கொண்டார். இதையடுத்து அவர் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டு, வருமானத்துக்கு அதிகமாக சொத்து குவித்த குற்றத்துக்கு 5 ஆண்டுகள், சட்டவிரோத பண பரிமாற்ற தடை சட்டத்தை மீறிய குற்றத்துக்காக 5 ஆண்டுகள் என மொத்தம் 10 ஆண்டு கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்து நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு வழங்கியது.

மேலும் அந்த நாட்டு அரசுக்கு 260 மில்லியன் டொலர் தொகையை அவர் திருப்பிச் செலுத்த வேண்டும் என்றும் தீர்ப்பில் கூறப்பட்டு உள்ளது.

இந்த ஊழலில் சிக்கிய ஆன்டனியோ சாகாவின் அரசு உயர் அதிகாரிகள் 6 பேருக்கு தலா 3 ஆண்டு முதல் 16 ஆண்டு வரையில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

## அமெரிக்காவில் 6 பேர் சுட்டுக்கொலை



வொஷிங்டன், செப்.15

அமெரிக்காவில் கலிபோர்னியா மாகாணத்தில் ஆண் ஒருவர் 6 பேரை சுட்டுக்கொன்ற சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

அமெரிக்காவில் கலிபோர் னியா மாகாணத்தில் பேக்கர்ஸ் பீல்ட் என்ற இடம் உள்ளது.

இந்த ஊரைச் சேர்ந்த கணவன்- மனைவி வாகனங்களை வாங்கி விற்கும் தொழில் செய்து வந்தனர்.

ஒருவரிடம் வாகனம் விற்பது சம்பந்தமாக பேசிக் கொண்டு இருந்தனர். அப்போது அந்த ஆண் திடீரென எதிரே இருந்த 2 பேரைச் சுட்டுக் கொன்றார். பின்னர் தனது மனைவியையும் கொன்றார்.

பிறகு அருகில் உள்ள மற் றொரு வீட்டுக்குள் சென்ற அவர் அங்கிருந்த 2 பேரைச் சுட்டுக் கொன்றார்.

அப்போது அங்கே ஒரு கார் வந்தது. அதில் ஒரு பெண்ணும், குழந்தையும் இருந்தனர். அந்த காரை அவர் கடத்திச் சென்றுள்ளார்.

சிறிது தூரம் சென்றதும் வீதியில் வந்த ஒருவரை சுட்டுக் கொன் றார். பின்னர் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்தார். இதோடு அந்த நபருடன் சேர்த்து 6 பேர் உயிர் இழந்தனர்.

இந்த சம்பவம் ஏன் நடந்தது? ஏன் அவர் இத்தனை பேரை சுட்டுக் கொன்றார் என்று தெரியவில்லை. பொலிஸார் இதுகுறித்து விசாரித்து வருகிறார்கள்.

இந்த 6 கொலைகளும் சில வினாடிகளில் நடந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

# அணுசக்தி விநியோக நாடுகள் குழுவில் இந்தியாவை இணைக்க வாதாடுவோம்!

## அமெரிக்கா அறிவிப்பு

நியூயோர்க், செப்.15

அணுசக்தி விநியோக நாடுகள் குழுவில் (NSG) இந்தியா இணைய சீனா எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில், இந்தியாவுக்கு முழு தகுதியும் இருக்கிறது என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அணுசக்தி விநியோக நாடுகள் குழுவில் (NSG) தற்போது 48 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. இந்தக் குழுவில் இடம் பெற இந்தியாவும், பாகிஸ்தானும் விண்ணப்பித்துள்ளன. அணுசக்தி விநியோகக் குழுவில் இடம் பிடிப்பதன் மூலம் இந்தியாவில் அணு மின் உற்பத்தியை மேம்படுத்த முடியும்.

அது பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் கை கொடுக்கும் என்பதால், அந்தக் குழுவில் இடம் பெற இந்தியா தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. பிரதமர் மோடி கடந்த சில மாதங்களாக நாடு, நாடாகச் சென்று இதற்கு ஆதரவு திரட்டி வந்தார்.

அதன் பயனாக அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜப்பான், ஆர்ஜெண்டினா, தென்கொரியா, மெக்சிகோ, சுவிற்சர்லாந்து, தென்னாபிரிக்கா, ரஷ்யா உள்பட பல நாடுகள் ஆதரவு தெரிவித்தன. என்றாலும், ஒரு நாடு எதிர்ப்பு தெரிவித்தால் கூட, அதில் புதிய உறுப்பினரைச் சேர்க்க முடியாது என்பதால் எதிர்ப்பு நாடுகளின் ஆதரவைப் பெற இந்தியா தீவிர முயற்சிகளில் ஈடுபட்டது.

இந்த குழுவில் உள்ள சீனா தனது வீட்டோ அதிகாரம் மூலம் இந்தியாவை சேர்க்க கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. அணு ஆயுத பரவல் ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடவில்லை என்பதை காரணம் காட்டி, இந்தியாவுக்கு சீனா எதிர்ப்புக் காட்டி வருகிறது.

இந்த நிலையில், அணுசக்தி விநியோக குழுவில் இடம் பெற இந்தியாவுக்கு முழு தகுதி இருப்பதாகவும், சீனாவின் எதிர்ப்பால் இந்தியாவில் இடம் பெற முடியவில்லை என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது. மேலும், இந்தக்குழுவில் இந்தியா இடம் பெற ஆக்கப்பூர்வமாக வாதாடுவோம் என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது. (கு)

## அமெரிக்காவில் சக்தி வாய்ந்த புயல்: 17 லட்சம் பேர் வெளியேற உத்தரவு!



அமெரிக்காவை 48 மணி நேரத்தில் அதிசக்தி வாய்ந்த புயல் தாக்கும் என்றும் இதன் தாக்குதல் பாதிப்பு கடுமையாக இருக்கும் என்று வானிலை திணைக்களம் கணித்துள்ளது.

அமெரிக்காவில் மழை காலம் தொடங்கி உள்ளது. இந்த காலக்கட்டத்தில் அடிக்கடி புயல் உருவாகி கிழக்கு பகுதி மற்றும் வடக்கு பகுதியைத் தாக்குவது உண்டு.

சில புயல்கள் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும். இப்போது அதே போல் ஒரு புயல் அட் லாண்டிக் கடல் பகுதியில் உருவாகி அமெரிக்காவின் கிழக்கு பகுதியை நோக்கி வந்து கொண்டு இருக்கிறது.

அடுத்த 48 மணி நேரத்தில் புயல் அமெரிக்காவைத் தாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த புயலுக்கு புளோரன்ஸ் என்று பெயரிட்டுள்ளனர்.

புயல் வடக்கு கரோலினா, தெற்கு கரோலினா, விர்ஜினியா ஆகிய மாநிலங்களை தாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது, அதிசக்தி வாய்ந்த புயலின் வரிசையில் 3 ஆவது இடத்தை வகிப்பது ஆகும். எனவே, இதன் தாக்குதல் பாதிப்பு கடுமையாக இருக்கும் என்று வானிலை திணைக்களம் கணித்துள்ளது.

கடந்த 30 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு புயல் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, 3 மாகாணத்திலும் கடலோர பகுதி மக்கள் மற்றும் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் வெளியேற உத்தரவிடப்பட்டுள்ளது. இதன்படி 17 லட்சம் பேரை வெளியேறும்படி கூறி உள்ளனர். அவர்கள் அந்த இடத்தில் இருந்து பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டு வருகிறார்கள்.

## உலகின் மிக குள்ளமான தாய் உடல்நலக்குறைவால் மரணம்



நியூயோர்க், செப்.15

உலகின் மிகச் சிறிய தாய் என கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்ற அமெரிக்காவைச் சேர்ந்த ஸ்டேகி ஹெரால்ட் உடல்நலக்குறைவால் மரணமடைந்துள்ளார்.

உலகின் விசித்திர மனிதர்களில் ஒருவரான ஸ்டேகி ஹெரால்ட் 2 அடி 4 அங்குலம் உயரம் கொண்டவர். அமெரிக்காவின் கென்டகி மாகாணத்தைச் சேர்ந்த இவர் வில் ஹெரால்டு என்பவரை காதலித்து திருமணம் செய்துகொண்டார்.

இந்தக் காதல் தம்பதிக்கு 3 குழந்தைகள் பிறந்தன. இடுப்புக்கு கீழே வளர்ச்சி அற்ற ஸ்டேகி, தனது 44 ஆவது வயதில் உடல்நலக்குறைவால் மரணமடைந்துள்ளார்.

இவர், உலகின் மிக குள்ளமான தாய் என கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஐ.எஸ்.ஐ. தான் உலகின் சிறந்த உளவுத்துறை; எங்களது முதல் வரிசை பாதுகாப்பும் அதுவே!

### பாக். பிரதமர் இம்ரான் கான் பெருமிதம்



ஐ.எஸ்.ஐ. தலைமைச் செயலகத்தை முதன் முதலாகப் பார்வையிட்ட பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான், ஐ.எஸ்.உலகிலேயே சிறந்த உளவு ஸ்தாபனம் என்றும் அதுவே தங்களது முதல்வரிசை பாதுகாப்பும் என்று கூறியுள்ளார்.

பாகிஸ்தானின் இண்டெர் சர்வீஸஸ் இண்டெலிஜென்ஸ் என் பதுதான் ஐ.எஸ்.ஐ. அழைக்கப்படுகிறது. இதற்கு இம்ரான் தன் அமைச்சரவை சகாக்களுடன் வருகை தந்தபோது அதிகாரிகள் பிரதமர் இம்ரானிடம் அவர்களது பல்வேறு பாதுகாப்புத் திட்டங்களை விளக்கினர்.

பாகிஸ்தான் பிரதமர் ஐ.எஸ்.ஐ. தேசப்பாதுகாப்புக்கு ஆற்றும் சேவையைப் பாராட்டியுள்ளார், குறிப்பாக, பயங்கரவாத எதிர்ப்புச் செயல்பாடுகளில் ஐ.எஸ்.ஐ யின் பாராட்டுக்குரிய செயல்களை விதந்தோதினார். மேலும், ஐ.எஸ்.ஐ. தான் நம் நாட்டின் முதல்வரிசை பாதுகாப்பும் ஆகும். மேலும், உலகிலேயே தலைசிறந்த உளவு ஸ்தாபனமும் இதுவே என்று இம்ரான் பாராட்டினார் என்று ஐ.எஸ்.ஐ. அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

இம்ரான் கான் பாகிஸ்தான் ராணுவத்தின் கையாள் என்று பலரும் அவரை விமர்சித்ததும் குறிப்பிடத்தக்கது.


எல்லை தாண்டிய பயங்கரவாதத்துக்கு முக்கிய காரணமே ஐ.எஸ்.ஐ. தான் என்று இந்தியா உள்ளிட்ட நாடுகள் குற்றம் சாட்டும் நிலையில் உலகில் தலை சிறந்த உளவு ஸ்தாபனம் என்று இம்ரான் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆஸி.தேசிய கீதம் இசைக்கப்பட்டவேளை எழுந்து நிற்க மறுத்த சிறுமியால் சர்ச்சை!

மெல்போர்ன், செப்.15

ஆஸ்திரேலியாவின் தேசிய கீதம் இசைக்கப்பட்டவேளை அதற்கு மரியாதை செலுத்துவதற்கு எழுந்து நிற்க மறுத்த 9 வயது சிறுமி தொடர்பில் பெரும் சர்ச்சை மூண்டுள்ளது.

ஹார்பர் நியெல்சன் என்ற சிறுமியே இவ்வாறு தேசிய கீதத்திற்கு மதிப்பளிக்க மறுத்துள்ளார்.



தேசிய கீதம் நாட்டின் பூர்வீக மக்களை அவமதிக்கின்றது என கருதியதாலேயே அது இசைக்கப்பட்டவேளை நான் எழுந்துநிற்கவில்லை என அந்தச் சிறுமி தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய தேசிய கீதம் வெள்ளையினத்தவர்களை மையமாகக் கொண்டது. சுதேசிய மக்களை முற்றாக புறக்கணிக்கின்றது எனவும் சிறுமி தெரிவித்துள்ளார்.

சிறுமியின் இந்தக் கருத்திற்கு வலது சாரி அரசியல்வாதிகள் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளனர்.

# நாடெங்கும் பா.ஜ.கவின்அலை; கடும் அச்சத்தில் எதிர்க்கட்சிகள்!

## தொண்டர்கள் மத்தியில் மோடி

2014 ஆம் ஆண்டு இருந்ததை விட மிகப்பெரிய பா.ஜ.க. அலை நாடு முழுவதும் வீசுவதால் எதிர்க்கட்சிகள் அச்சத்தில் இருக்கின்றன என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி, ‘நமோ’ செல்போன் செயலி மூலம் அடிக்கடி பா.ஜ.க. தொண்டர்களிடையே உரையாற்றி வருகிறார். அந்தவகையில் அருணாச்சல் மேற்கு, காசியாபாத், ஹசாரிபாக், ஜெய்ப்பூர் ஊரகம் மற்றும் நவடா நாடாளுமன்ற தொகுதிகளைச் சேர்ந்த பா.ஜ.க. தொண்டர்களிடம் நேற்று முன்தினம் உரையாற்றினார்.

அப்போது அவர் தெரிவித்தவை வருமாறு –

2013 - 2014 ஆம் ஆண்டுகளில் இருந்ததை விட தற்போது நாடு முழுவதும் மிகப்பெரிய பா.ஜ.க. அலை வீசுகிறது. இதைப்பார்த்து எதிர்க்கட்சிகள் அச்சமடைந்துள்ளன. இந்த அலையே எதிர்க்கட்சிகளை ஒன்றிணைய வைத்துள்ளது. இல்லையென்றால் அவை ஒவ்வொன்றும் அடித்துச் செல்லப்படும்.

எதிர்க்கட்சிகள் தங்கள் நம்பிக்கையின் நெருக்கடியை உணர்ந்துள்ளன. அவை தூக்கத்தில் இருந்து எழும்ப மறுக்கின்றன. பிற பிரச்சினைகளை பற்றி பேசுவதாலும், அடுத்தடுத்து குற்றச்சாட்டுகளை அடுக்குவதாலும் வாக்காளர்களிடம் நம்பிக்கையை பெற முடியும் என நினைக்கின்றன. ஆனால் இந்திய மக்கள் இன்று உணர்திறன் மிக்கவர்களாகவும், அனைத்தையும் அறிந்தவர்களாகவும் இருக்கின்றனர்.



கடந்த நான்கரை ஆண்டுகளில் காங்கிரஸ் மற்றும் எதிர்க்கட்சிகளின் குட்டு அம்பலமாகி இருக்கிறது. பா.ஜ.கவுக்கு வாக்களித்த மக்கள், ஊழலில் திளைத்த காங்கிரஸை ஆட்சியில் இருந்து தூக்கி எறிந்தனர். ஆனால் எதிர்க்கட்சியாக கூட தங்கள் கடமையை அவர்கள் ஆற்றவில்லை.

ஊழலில் மூழ்கி இருந்த நிலக்கரி, தொலைத்தொடர்பு போன்ற துறைகளை அதிலிருந்து வெளியே எடுத்த எங்கள் அரசு, இன்று வேகமாக வளர்ச்சியடையும் துறையாக தொலைத்தொடர்பு துறையை மாற்றி இருக்கிறது.

பா.ஜ.கவில் மட்டுமே சாதாரண தொண்டரும் அதன் தலைவராக முடியும். நாளை என்னுடைய இடத்துக்கும் வேறு ஒருவரால் வர முடியும். ஆனால் காங்கிரஸ் கட்சியோ ஒரு குடும்பத்தின் கட்சி. அந்த குடும்பத்தின் நலனுக்காக பல தலைவர்கள் மற்றும் தொண்டர்கள் தியாகம் செய்து வருகின்றனர். அதைப் பார்த்து பரிதாபம் அடைகிறேன்.

பா.ஜ.கவின் ஒவ்வொரு தொண்டரும் தனது வாக்குச்சாவடிக்கு உட்பட்ட பகுதியில் கட்சியை பலப்படுத்த வேண்டும். எனது வாக்குச்சாவடியே வலிமையானது என்பதை ஒவ்வொருவரும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பா.ஜ.க. கூட்டணிக்கு முயற்சிக்கிறார் ஸ்டாலின்



மு. தம்பிதுரை குற்றச்சாட்டு

அ.தி.மு.க. அரசுக்கு நெருக்கடிக்கொடுக்க, கவிழ்க்க பா.ஜ.கவுடன் உறவைப் புதுப்பிக்க ஸ்டாலின் முயற்சிக்கிறார் என நாடாளுமன்ற துணை சபாநாயகரும், அ.தி.மு.க. கொள்கை பரப்பு செயலாளருமான மு. தம்பிதுரை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தம்பிதுரை மேலும் தெரிவித்தவை வருமாறு –

அ.தி.மு.க. அரசுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்த தி.மு.க. – பா.ஜ.க. முயல்கிறது. ஸ்டாலின் ஆட்சியை முடக்க முயற்சிக்கிறார். சட்டப்பேரவையில் சபாநாயகர் நாற்காலியை உடைக்க செய்து முயன்றார்கள் முடியவில்லை. அதன் பின்னர் போராட்டம் எல்லாம் நடத்திப் பார்த்தார்கள் அதுவும் முடியவில்லை.

தற்போது மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு ஏதாவது செய்ய முடியுமா என்று முயல்கிறார்கள். ஏனென்றால் எது இருந்தாலும் ஆட்சியை கலைக்க மத்திய அரசால்தானே முடியும். இப்படி நடந்தால் ஆட்சி நமது கையில் வந்துவிடும் என்று ஸ்டாலின் நினைக்கிறார். அதற்காக பா.ஜ.கவுடன் தொடர்பு கொள்வதற்கு கூட்டணி வைப்பதற்கு பல கட்டங்கள் முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

தங்களுடைய உறவை புதுப்பித்துக்கொள்வதற்காக முயற்சி நடந்து கொண்டிருக்கின்றன. அதை வைத்துக்கொண்டு அரசுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதற்கு தி.மு.க. – பா.ஜ.கவுடன் இணைய முயற்சி எடுத்து வருகிறது என்றும் தம்பிதுரை தெரிவித்துள்ளார்.

# தமிழக அரசின் ஆயுள் காலத்தை மோடி தான் தீர்மானிக்கின்றார்!

## கொம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் முத்தரசன் தெரிவிப்பு

தமிழக அரசின் ஆயுள் காலத்தை தீர்மானிக்கும் இடத்தில் பிரதமர் மோடி உள்ளார் என்று முத்தரசன் தெரிவித்துள்ளார்.

இந்திய கொம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் முத்தரசன் புதுக்கோட்டையில் நிருபர்களிடம் தெரிவித்தவை வருமாறு–

பெற்றோல் – டீசல் விலையை குறைக்க மத்திய, மாநில அர சுகள் நடவடிக்கை எடுக்காமல் ஒருவர் மீது ஒருவர் குறை கூறிக்கொண்டு மக்களுக்கு எதிராக செயல்பட்டு வருகின்றன. அங்கன்வாடி பணியாளர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படும் என்று பிரதமர் அறிவித்துள்ளார்.

ஆனால், அங்கன்வாடி மற்றும் சத்துணவு பணியாளர்கள் கேட்பது பணி நிரந்தரம். எனவே அவர்களை பணி நிரந்தரம் செய்வதற்கானநடவடிக்கையை எடுக்க வேண்டும்.

காவிரியில் தண்ணீர் வந்தும் கடைமடை பகுதியை தண்ணீர் சென்றடையாததால் நேரடி விதைப்பின்மூலம் பயிரிடப்பட்ட நெற்பயிர்கள் கருகி வருகின்றன. கடைமடை பகுதி வரை தண்ணீர் செல்வதற்கும், கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு கடன் வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். தம்பிதுரை கூறுவது போன்று தி.மு.க.– பா.ஜ.க. இடையே உறவு எதுவும் கிடையாது.

பொதுக்குழுவில் மோடி அரசை வீழ்த்த அனைவரும் ஒன்று திரள வேண்டும் என்று ஸ்டாலினே கூறியுள்ளார். சொந்த எம்.எல்.ஏ.க்கள், பொது மக்கள் ஆகியோரின் நம்பிக்கையை இழந்து பிரதமரின் தயவால் பழனிச்சாமி அரசு நாள்களை நகர்த்தி கொண்டிருக்கிறது. தமிழக அரசின் ஆயுள் காலத்தை தீர்மானிக்கும் இடத்தில் மோடி உள்ளார் என்றும் அவர் கூறியுள்ளார்.

# கலைஞர் எழுச்சி பேரவை என்ற புதிய அமைப்பை தொடங்குகிறார் அழகிரி

கலைஞர் எழுச்சி பேரவை என்ற பெயரில் புதிய அமைப்பை மு.க அழகிரி தொடங்க இருக்கிறார் என்றும் அது தொடர்பாக மாவட்ட வாரியாக தனது ஆதரவாளர்களுடன் ஆலோசனை நடத்த உள் ளார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தி.மு.க. தலைவராக இருந்த கருணாநிதி மறைவுக்கு பின்னர் மு.க. ஸ்டாலின் கட்சியின் தலைவராக தேர்வு செய்யப்பட்டு பொறுப்பேற்றார். ஆனால், கருணாநிதி இருக்கும் போதே தி.மு.க.வில் இருந்து நீக்கப்பட்ட அழகிரி, அவரது மறைவுக்கு பின்னர் தனது ஆதரவாளர்களுடன் பேரணி நடத்தினார்.



இந்நிலையில், கலைஞர் எழுச்சி பேரவை என்ற பெயரில் புதிய அமைப்பை மு.க அழகிரி தொடங்க இருக்கிறார் என அவரது ஆதரவாளர் இசக்கி முத்து தெரிவித்துள்ளார். இதற்காக, மாவட்ட வாரியாக ஆதரவாளர்களுடன் அவர் ஆலோசனை நடத்தி வருகிறார் என்றும் கூறியுள்ளார்.

காஞ்சிபுரம், சிவகங்கை மாவட்ட ஆதரவாளர்களை இன்றும் தஞ்சை, திருவாரூர் மாவட்ட ஆதரவாளர்களை நாளை யும் சந்தித்து முக அழகிரி ஆலோசனை நடத்த உள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7 பேர் விடுதலை விவகாரம்:

# ஆளுநர் பன்வாரிலால் புரோகித் உள்துறை அமைச்சகத்துக்கு அறிக்கை

பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரை விடுதலை செய்ய தமிழக அமைச்சரவை பரிந்துரை செய்துள்ள நிலையில், இது தொடர்பாக ஆளுநர் பன்வாரிலால் புரோகித் உள்துறை அமைச்சகத்துக்கு அறிக்கை அளித்துள்ளார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப் பட்டு 25 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் இருக் கும் பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரை விடுதலை செய்ய தமிழக அமைச்சரவை ஆளுநருக்கு பரிந்துரை செய்தது. இது தொடர்பாக முடிவெடுக்க ஆளுநர் பன்வாரிலால் புரோகித் சட்ட வல்லுநர்களுடன் ஆலோசனை நடத்தி வருகிறார்.



இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு பன்வாரிலால் புரோகித் அறிக்கை அனுப்பியுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# ஜெயலலிதா சிறை செல்ல காரணமானவர் தினகரன்!

## அ.தி.மு.க. துணை ஒருங்கிணைப்பாளர் வைத்திலிங்கம் சாடல்

ஜெயலலிதா சிறைக்கு செல்ல காரணமாக இருந்த தினகரனின் திருட்டுத்தனம் திருப்பரங்குன்றத்தில் எடுபடாது என்று அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.

மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் தொகுதியில் ஜெயலலிதா பேரவை சார்பில் 5 ஆயிரம் இளைஞர்கள் பங்கேற்கும் அரசின் சாதனை விளக்க சைக்கிள் பேரணி நேற்று முன்தினம் நடைபெற்றது.

அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் தலைமையில் புறப்பட்ட சைக்கிள் பேரணியை அமைச்சர்கள் திண்டுக்கல் சீனிவாசன், செல்லூர் ராஜு, தங்கமணி உள்ளிட்ட அமைச்சர்கள் மதுரை தனக்கன்குளத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தொடங்கி வைத்தனர்.

நிகழ்ச்சியில் அ.தி.மு.க. துணை ஒருங்கிணைப்பாளர் வைத்திலிங்கம் உரையாற்றுகையில்–

எம்.ஜி.ஆர். தொடங்கிய அ.தி.மு.க.வில் அவ்வப்போது சில சேதாரங்கள் ஏற்பட்டது உண்டு. ஆனால் அ.தி.மு.க. சேதம் அடையவில்லை. தினகரன், ரஜனி, மு.க.ஸ்டாலின், கமல் போன்றவர்கள் முதல்வர் நாற்காலிக்காக கனவு காண்கிறார்கள். அது ஒருபோதும் நடக்காது.

இவர்களால் அ.தி.மு.க. சிறிதளவு கூட மக்கள் செல்வாக்கை இழக்காது. திருப்பரங்குன்றம் தொகுதியில் கடந்த 1977 ஆம் ஆண்டில் இருந்து அ.தி.மு.க. வெற்றி பெற்று வருகிறது. தொடர்ந்து மக்கள் அ.தி.மு.க.வை வெற்றி பெற வைப்பார்கள்.

திருப்பரங்குன்றம் தொகுதியில் எப்போது இடைத்தேர்தல் நடந்தாலும் அ.தி.மு.க. அமோக வெற்றி பெறும். இந்த வெற்றிக்கு பிறகு தி.மு.க.வின் தலைவராக மு.க.ஸ்டாலின் இருக்க முடியாது. அதுமட்டுமின்றி தமிழகத்தில் முளைத்துள்ள சிறுசிறு கட்சிகளும் காணாமல் போய்விடும்.

எம்.ஜி.ஆர். கட்சி தொடங்கியபோது அவரை ஆதரித்தது மதுரை மாவட்ட மக்கள் தான். எம்.ஜி.ஆர். தந்த தொகுதி திருப்பரங்குன்றம்.

தன்னை உயர்ந்த நிலைக்கு கொண்டு சென்ற அ.தி.மு.க.வுக்கு துரோகம் செய்தார் தினகரன். மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா சிறைக்குச் செல்ல காரணமாக இருந்தவர் தான் தினகரன். அ.தி.மு.க.வில் உற்சாகமான தொண்டர்கள் உள்ளனர். எனவே இந்த இயக்கத்திற்கு ஒருபோதும் வீழ்ச்சி இல்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

## சுமந்திரனுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தச் சுவரொட்டிகளில் இது தமிழ்த் தலைவர்கள் எனப்படுவோர் ஐக்கியப்பட வேண்டிய நேரம் எனதலைப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் அதில் சுமந்திரன் தமிழர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தக் கூடாது. அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் பதவியையும் இராஜினாமா செய்யவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## சம்பிக்கவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கவை நியமிப்பதற்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சபையில், ஜனாதிபதியின் பிரதிநிதியாகச் செயற்பட்டு வந்த சம்பிக்க ரணவக்கவின் காலம் கடந்த 05ஆம் திகதியுடன் நிறைவடைந்துள்ள நிலையில், மஹிந்த சமரசிங்கவை நியமிக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பரிந்துரை செய்துள்ளார். (ஐ)

## தவறான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாரதிய ஜனதா கட்சியின் மூத்த உறுப்பினரான சுப்ரமணியன் சுவாமியின் அழைப்புக்கு அமைய கடந்த 10 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த உள்ளிட்ட குழுவினர் டில்லி சென்றிருந்தனர்.

இந்த விஜயம் குறித்து நேற்று வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மஹிந்த மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

இந்த விஜயத்தின்போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, முன்னாள் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களுடன் மிக சிநேகபூர்வமான கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

இந்த விஜயத்தின் ஊடாகப் பல புதிய மாற்றங்கள் ஏற்படும் சாத்தியப்பாடுகள் காணப்படுகின்றன. இந்தியப் பயணத்தை நிறைவு செய்து வெற்றியுடன் நாடு திரும்பியுள்ளோம் – என்றுள்ளது. (ஐ)

## தமிழருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகிர்வைக் கோருகிறார்கள் என்றும் தெரிவித்துள்ளார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த மஹிந்த, நியூஸ் எக்ஸ் தொலைக்காட்சிக்கு அளித்திருந்த செவ்வியிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

தமிழ் மக்கள் அதிகாரங்களைப் பகிர்ந்து தருமாறு கேட்கவில்லை. அரசியல்வாதிகள் தான் அதனைக் கோருகிறார்கள். தமிழ் மக்கள் வேலை வாய்ப்பு மற்றும் அபிவிருத்தியைத் தான் கேட்கிறார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மற்றொரு கேள்விக்குப் பதிலளித்த அவர், இலங்கை சிறிய நாடு. நாங்கள் நாட்டை பிரித்து சமஷ்டித் தீர்வை வழங்க முடியாது. அதற்கான சாத்தியம் முற்றாக இல்லை.

நான் ஆட்சியில் இருந்த போது, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் என்னிடம் வந்து இது குறித்து பேசத் தயாராக இருக்கவில்லை.

ரணில் விக்கிரமசிங்க தமக்கு சிறந்த தீர்வை வழங்குவார் என அவர்கள் கருதினர் என்று கூறினார். (ஐ)

## யாழ்.பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பழுதடைந்த கைக்குண்டு ஒன்றை ஊழியர்கள் கண்டு பொலிஸாருக்கு அறிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது.

பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள சிவன் ஆலயத்துக்கு முன்பாக கட்ட வேலைக்காக நிலத்தைத் தோண்டும் பணி நேற்று இடம்பெற்றது. இதன் போதே பழுதடைந்த கைகுண்டு ஒன்றை நிலத்தைத் தோண்டும் பணியில் ஈடுபட்டவர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

இதனையடுத்து யாழ். பல்கலைகழக நிர்வாகத்துக்கு விடயத்தை தெரியப்படுத்தியதன் அடிப்படையில் பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (ஐ-7)

## இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனைகளும் விதிக்கப்படுவதில்லை எனச் சீன அரசு தெரிவித்துள்ளது.

சீன ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வி ஒன்றில் அந்நாட்டு வெளிவிவகார அமைச்சகப் பேச்சாளர் ஜெங் சுவாங் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சீனா இலங்கைக்கு நிதி உதவிகளை வழங்கும்போது எந்த வித அரசியல் நிபந்தனைகளையும் விதிப்பதில்லை. சீனாவின் புதிய பட்டுப்பாதைத் திட்டம் பிராந்திய வளர்ச்சிக்குத் தொடர்ந்தும் உதவும்.

சீனாவின் புதிய பட்டுப்பாதைத் திட்டம் இரு நாடுகளுக்கும் மக்களுக்கும் பலன் அளித்துள்ளது – என்றார். (ஐ)

## இராணுவத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்றமை தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீது கடுமையாக விமர்சனத்தை முன்வைத்துள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

ஜனாதிபதிக்குத் தெரியாமல் பாதுகாப்புப் பிரிவின் தலைவர் ரவீந்திர விஜேகுணரத்ன வெளிநாட்டுக்குப் பயணிக்க வாய்ப்பில்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட விவகாரம் தொடர்பாக வாக்கு மூலமொன்றைப் பதிவு செய்துக் கொள்வதற்காக ரவீந்திர விஜேகுணரத்ன குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு கடந்த திங்கட்கிழமை அழைக்கப்பட்டிருந்தார். ஆனால், குற்றப்புலனாய்வுப் பிரிவில் முன்னிலையாகாத பாதுகாப்புப் பிரிவின் தலைவர் அன்றைய தினம் மெக்ஸிக்கோவுக்கு பயணித்துள்ளார்.

இந்நிலையிலேயே அவர் ஜனாதிபதிக்கு அறிவிக்காது வெளிநாடு செல்ல வாய்ப்பில்லை எனக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் குறிப்பிட்டார்.

நேற்று முன் தினம் அவசர அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டிய ஜனாதிபதி, உயர்மட்ட இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக குற்றம்சாட்டப்பட்டால் அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யுமாறும், ஆனால் கைது செய்ய வேண்டாம் என்றும் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சிங்களக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மாளிகையில் நேற்று நடைபெற்ற ஊடக ஆசிரியர்களுடனான சந்திப்பின் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மகாவலி அதிகார சபை ஊடாக அரசு திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை நிறுவி வருவதாக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பில் ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அவர்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிங்களக் குடியேற்றங்கள் எதனையுமே அரசு முன்னெடுக்கவில்லை. அப்படி ஒருபோதும் நடக்காது.

கொள்கை ரீதியாக எந்தவொரு மக்கள் பிரிவினருக்கும் நாட்டின் எந்தவொரு இடத்திலும் குடியேறும் உரிமை உள்ளது.

மாகாண பேதங்களின்றி அனைத்து மக்களும் நல்லிணக்கத்துடனும் ஐக்கியத்துடனும் வாழும் நாட்டை உருவாக்குவதே எனது எதிர்பார்ப்பாகும்.

பிரச்சினைகள் ஏற்படும் வகையில் குடியேற்றங்களை அமைப்பது அரச தலைவீட்டுடன் இடம்பெறவில்லை. எதிர்காலங்களிலும் இவ்வாறு இடம்பெறப் போவதில்லை. இது தொடர்பில் அரசு மீது முன்வைக்கப்பட்டுள்ள அனைத்து குற்றச்சாட்டுக்களையும் நிராகரிக்கிறேன் – என்றார். (ஐ)

## நாட்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஜனாதிபதி மாளிகையில் நேற்று நடைபெற்ற ஊடகப் பிரதானிகளுடனான சந்திப்பின் போதே ஜனாதிபதி இந்தக் கருத்தை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தூக்கத்திலிருந்து திடீரென விழித்தவர்கள் உளறுவதுபோல், சிலர் நாட்டின் பாதுகாப்பு குறித்து கருத்து வெளியிடுகின்றனர். பாதுகாப்பு பலவீனமாகிவிட்டதாகவும் விமர்சிக்கின்றனர். இது முற்றிலும் தவறான அறிவிப்பாகும்.

நாட்டின் பாதுகாப்பு பலமாகவே இருக்கின்றது. இராணுவம் தயார் நிலையிலேயே உள்ளது. எமது படையினரை இன்று உலக நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன. உரிய அங்கீகாரமும் வழங்கப்பட்டுள்ளது. பல நாடுகள் இராணுவ உதவிகளையும், பயிற்சிகளையும் வழங்கி வருகின்றன.

போர் முடிவடைந்த பின்னரும் பாதுகாப்பு அமைச்சுக்கே இன்னும் கூடுதல் நிதி ஒதுக்கப்படுகின்றது. அதில் நாம் எவ்வித குறைப்பையும் செய்யவில்லை. ஆனால், போர்க் காலத்தில் ஆங்காங்கே அவசர தேவைகளின் நிமித்தம் அமைக்கப்பட்ட தற்காலிக முகாம்கள் அகற்றப்பட்டு வருகின்றன. அவை தற்போது தேவைப்படாது. இதையே தவறான விம்பத்தில் சிலர் பார்க்கின்றனர்.

அதேவேளை, படையினருக்கு எதிராகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டாலும் இன்னும் ஒருவருக்கு எதிராகவேனும் வழக்கு தொடுக்கப்படவில்லை. கைதும் அதன் பின்னர் பிணையுமே வழங்கப்படுகின்றது. இதை வைத்துத்தான் இராணுவத்தை அரசு பழிவாங்குவதாகச் சிலர் விமர்சிக்கின்றனர்–என்றார். (ஐ)

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முதல் மீண்டும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள எட்டு தமிழ் அரசியல் கைதிகளே இவ்வாறு உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

2012ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட மதியரசன் சுலக்ஸன், கணேசன் தர்சன், இராசதுரை திருவருள் ஆகியோர் இதற்கு முன்னர் கடந்த 2017ஆம் ஆண்டு உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்தனர். இந்நிலையில் அவர்கள் நேற்று முதல் மீண்டும் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

தமிழ் மக்கள் பிரதிநிதிகள் சிறைச்சாலைக்கு வந்து ஒன்றரை வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டதாகவும், இன்றுவரை யாரும் தம்மை வந்து பார்த்ததாகவோ, தமது விடுதலை தொடர்பாக நடவடிக்கை எடுத்ததாகவோ தெரியவில்லை என்றும் அரசியல் கைதிகள் குற்றம் சுமத்தியுள்ளனர். (ஐ)

## ஐ.நா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் போரின் பின்னரான பிரச்சினைகள் தொடர்பில் ஐ.நா. பொதுச் சபையில் புதிய முன்மொழிவு ஒன்றை முன்வைக்கவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இந்த முன்மொழிவு எதிர்வரும் 2019 மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அமர்வில் இலங்கையின் பிரேரணையாக முன்வைக்கப்படும் என்று அவர் கூறினார்.

ஜனாதிபதி மாளிகையில் நேற்று இடம்பெற்ற ஊடக ஆசிரியர்களுடனான சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

ஐக்கிய நாடுகள் சபையின் வருடாந்த பொதுச்சபை கூட்டத் தொடரில் இம்மாதம் 25 ஆம் திகதி இலங்கை தொடர்பில் புதிய முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளேன்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு இலங்கைக்கு முன்வைத்துள்ள பிரேரணைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் சலுகைகளை பெற்றுக்கொள்ளல், நாட்டின் சுயாதீனத் தன்மை மற்றும் தேசிய பாதுகாப்பு, முப்படையினரின் கௌரவம் ஆகியவற்றுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் செயற்படுதல் தொடர்பான விடயங்கள் அந்த முன்மொழிவில் உள்ளடக்கப்படும்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னிலையில் எமது பாதுகாப்புப் படையினருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களைப் போன்றே கடந்த யுத்த காலத்தில் இரு தரப்பினரிடையேயும் இடம்பெற்றதாகக் கூறப்படும் சில சம்பவங்கள் தொடர்பில் இன்னும் தீர்க்கப்படாதுள்ள பல பிரச்சினைகளை சுமூகமாகத் தீர்த்துக்கொள்வதற்கு அதனூடாக வாய்ப்பு ஏற்படும்.

இந்த முன்மொழிவுகளை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடமும் ஐ.நா. பொதுச் செயலாளரிடமும் எழுத்து மூலமாகச் சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளேன்.

இந்த முன்மொழிவு எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அமர்வில் இலங்கையின் பிரேரணையாக முன்வைக்கப்படும்.

2015 ஒகஸ்ட் மாதம் முதல் முப்படை அதிகாரிகளும் ஒரு சில விசாரணைகள் தொடர்பில் கைது செய்யப்பட்டுச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள போதிலும், அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை. போதுமான சாட்சியங்கள் காணப்படுமாயின் வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதைவிடுத்து அனாவசியமாக அவர்களைச் சிறையில் தடுத்து வைத்திருப்பதனால் அரசுக்கு அபகீர்த்தி ஏற்படும். இவ்விடயம் தொடர்பில் நான் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளுக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் கடுமையான பணிப்புரைகளை விடுத்துள்ளேன் – என்றார். (ஐ)

## மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் மற்றும் பொதுத்தேர்தலில் வெற்றிபெறும் என 'எக்னமிஸ்ட்' சஞ்சிகை தெரிவித்துள்ளது.

எக்னமிஸ்டின் இலங்கை தொடர்பான அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் அடுத்த நாடாளுமன்றத் தேர்தல் 2020 நடுப்பகுதியில் இடம்பெறவுள்ளது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆசனங்களை கைப்பற்றி அரசை அமைக்கும் என நாங்கள் கருதுகின்றோம்.

இந்த வருடம் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் கட்சி பெற்ற பெரும் வெற்றி கட்சிக்கான ஆதரவையும் தற்போதைய அரசுக்கு எதிரான மனோநிலை அதிகரித்து வருவதையும் புலப்படுத்தியுள்ளது .

ஆளும் கூட்டணிக்குள் காணப்படும் முறுகல் நிலை மற்றும் திறமையற்ற நிர்வாகம் காரணமாக ஐக்கிய தேசியக் கட்சியோ அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோ மக்களின் நம்பிக்கையை மீளப் பெறமுடியாது.

இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி மீண்டும் தேர்தலில் போட்டியிடுவார், 19ஆவது திருத்தம் காரணமாக முன்னாள் ஜனாதிபதியால் தேர்தலில் போட்டியிட முடியாது. எனினும் பிரதமர் பதவி உள்ளது.

மஹிந்தவின் நெருங்கிய சகா ஒருவரோ அல்லது உறவினரோ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுவார்கள் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

ராஜபக்ஷ தரப்பு மீண்டும் உத்வேகம் பெற்றுள்ளது. கடந்த தேர்தலில் சிறிய வித்தியாசத்திலேயே சிறிசேன வெற்றி பெற்றதைக் கருத்தில் கொள்ளும் போது வாக்காளர் ஆதரவில் சிறிய மாற்றம் ஏற்பட்டாலும் ராஜபக்ஷ தரப்பு வேட்பாளர் வெற்றி பெறக்கூடும்.

அரசியல் நிச்சயமற்ற தன்மை அதிகரித்து வரும் நிலையில் புதிய அரசமைப்பு முயற்சிகள் கவனத்தை இழக்கும் என நாங்கள் கருதுகின்றோம். 2020 வரை ஆட்சியிலிருப்பதே அரசின் நோக்கமாக காணப்படும் என்பதால் புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சிகள் கவனத்தை இழக்கலாம்.

தற்போதைய அரசின் காலத்தில் அரசமைப்புச் சீர்திருத்தங்கள் நிறைவேறச் சாத்தியமில்லை என நாங்கள் கருதுகின்றோம் – என்றுள்ளது. (ஐ)

# ஒரு நாள் அணியின் தலைமையிலிருந்து விலகியது ஏன்?

## விளக்குகிறார் டோனி




2019 உலகக் கிண்ணத்துக்குத் தயாராவதற்கான கால அவகாசத்தை விராட் கோஹ்லிக்கு வழங்குவதற்காகவே நான் தலைமைத்துவத்திலிருந்து விலகினேன் என டோனி தெரிவித்துள்ளார்.

2019 உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு கோஹ்லி தயாராவதற்கான போதிய கால அவகாசத்தை வழங்கவேண்டும் என நான் கருதினேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உரிய தலைவரைத் தெரிவு செய்யாமல் வலுவான அணியை உருவாக்க முடியாது எனவும் டோனி தெரிவித்துள்ளார்.

உரிய தருணத்தில் நான் தலைமையிலிருந்து விலகினேன் எனக் கருகின்றேன் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இங்கிலாந்தில் டெஸ்ட் தொடரை இந்திய அணி இழந்தமைக்கு போதிய பயிற்சியாட்டங்களில் பங்கெடுக்காமையே காரணம் எனவும் டோனி தெரிவித்துள்ளார்.

இந்திய அணி பயிற்சி யாட்டங்களில் விளையாடவில்லை. இதன் காரணமாகவே துடுப்பாட்ட வீரர்களால் இங்கிலாந்து அணியின் சூழலிற்கு ஏற்ப மாறமுடியவில்லை எனவும் டோனி குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக இந்திய அணியைக் குறைத்து மதிப்பிட முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.




# இலங்கை அணிக்கு மேலுமொரு பின்னடைவு




ஆசிய கிண்ணப் போட்டியில் வெற்றி பெறும் முனைப்புடன் சென்ற இலங்கை அணிக்கு மேலும் ஒரு பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

அந்தவகையில் இலங்கை அணியின் தொடக்க ஆட்டக்காரர் தனுஷ்க குணதிலக உபாதை காரணமாகப் போட்டியிலிருந்து வெளியேறினார்.

டுபாயில் இடம்பெற்ற பயிற்சிகளின்போதே அவருக்கு காயம் ஏற்பட்டதாக இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இந்நிலையில் அவருக்குப் பதிலாக ஹெரான் ஜயசூரிய விளையாடுவர் என்றும் இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

# ஐ.சி.சி.யின் அறிவிப்பால் கிரிக்கெட் வீரர்கள் மகிழ்ச்சி




ஆசிய கிண்ணக் கிரிக்கெட் தொடரின் அனைத்து ஒருநாள் போட்டிகளுக்கும் சர்வதேச ஒருநாள் அந்தஸ்து வழங்கப் படவுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் இந்த அறிவிப்பால் வீரர்கள் மகிழ்ச்சியில் திளைத்துள்ளனர்.

இதுவரை காலமும், சர்வதேச கிரிக்கட் அந்தஸ்தை பெற்றுக் கொண்ட அணியும், அந்தெஸ்து இல்லாத அணியும் விளையாடும் போட்டிகளுக்கு சர்வதேச ஒருநாள் அந்தஸ்தை வழங்குவதில் சிக்கல் நிலைமை நீடித்துவந்தது.

அத்தோடு, இந்தமுறை ஆசிய கிண்ணத் தொடருக்கு சர்வதேச ஒருநாள் அந்தஸ்து கிடைக்கப்பெறாத ஹொங்கொங் அணியும் பங்குபற்றுகின்றமையாலேயே இந்த நிலைமை நிலவியது.

எனினும் இனிவரும் காலங்களில் இவ்வாறான கலப்புப் போட்டிகள் அனைத்திற்கும் சர்வதேச ஒருநாள் போட்டிக்கான அந்தஸ்தினை வழங்க சர்வதேச கிரிக்கெட் சபை தீர்மானித்திருக்கிறது.

இந்தக் கொள்கை மாற்றத்தின் அடிப்படையில் பலன்பெறுகின்ற முதலாவது தொடராக எதிர்வரும் ஆசியக் கிண்ணத் தொடர் இருக்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், உலக கிண்ணத் தகுதிகாண் போட்டிகளின்போதும், இதே நடைமுறை பின்பற்றப்படவுள்ளது.

ஆசியாவின் ஆறு பலம் வாய்ந்த கிரிக்கெட் அணிகள் மோதும் ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடர், இம்முறை ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறவுள்ளது.

இன்று முதல் 28ஆம் திகதி வரை அபுதாபி மற்றும் டுபாய் என இரண்டு மைதானங்களிலும் இப்போட்டிகள் நடைபெறவுள்ளன. மொத்தம் 13 போட்டிகள் நடைபெறுகின்றன. இறுதிப்போட்டி டுபாயில் நடைபெறுகின்றது.

இத்தொடரில், இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் ஹொங்கொங், ஆகிய அணிகள் தகுதிபெற்றுள்ளன.

இதன்படி தற்போது இத்தொடருக்காக ஏ, பி என இரு பிரிவுகள் பிரிக்கப்பட்டுள்ளன. இதில் 'ஏ' பிரிவில் இந்தியா, பாகிஸ்தான், ஹொங்கொங் அணிகள் இடம்பெற்றுள்ளன. பி' பிரிவில் பங்களாதேஷ், இலங்கை, ஆப்கானிஸ்தான் அணிகள் இடம்பெற்றுள்ளன.

இரு பிரிவுகளிலும் முதல் இரு இடங்கள் பெறும் அணிகள் சுப்பர் 4 சுற்றுக்கு தகுதி பெறும். அவற்றில் இருந்து இரு அணிகள் இறுதி சுற்றுக்கு தேர்வு செய்யப்படும்.

# ஆசியக் கிண்ணம் இன்று ஆரம்பம்

இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஹொங் கொங் அணிகள் பங்கேற்கும் 14ஆவது ஆசியக் கிண்ணத் தொடர், ஐக்கிய அரபு அமீரகத்தின் டுபாயில் இலங்கை, பங்களாதேஷ் அணிகள் இலங்கை நேரப்படி நாளை மாலை ஐந்து மணிக்கு மோதவுள்ள குழு பி போட்டியுடன் ஆரம்பிக்கின்றது.

இதுவரை நடைபெற்ற ஆசியக் கிண்ணத் தொடர்களில் ஆறு தடவைகள் சம்பியனாகி இந்தியாவே அதிக தடவைகள் சம்பியனான அணியாகக் காணப்படுகின்றது. இது தவிர, இறுதியாக 2016ஆம் ஆண்டு இடம்பெற்ற தொடரிலும் இந்தியாவே சம்பியனாகியது.

தமது முதன்மை துடுப்பாட்ட வீரரான விராட் கோலிக்கு ஓய்வு வழங்கிவிட்டு இத்தொடரில் களமிறங்கும் இந்தியாவுக்கே கிண்ணத்தை தக்க வைக்கும் அதிகளவான வாய்ப்புகள் காணப்படுகின்றபோதும் இம்முறை ஆசியக் கிண்ணப் போட்டிகளானவை ஒருநாள் சர்வதேசப் போட்டிகளாகக் காணப்படுகின்ற நிலையில், பங்களாதேஷ், பாகிஸ்தான், இலங்கை, ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட அணிகளும் இந்தியாவுக்குச் சவாலை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

1984ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஆசியக் கிண்ணமானது, இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை இடம்பெறுகையில், 2015ஆம் ஆண்டு முதல் நடைபெறும் ஆசியக் கிண்ணங்களானதை அதைத் தொடர்ந்துவருகின்ற உலகத் தொடர்களைப் பொறுத்து, ஒருநாள் சர்வதேசப் போட்டிகளாகவும் இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டிகளாகவும் மாறி மாறி இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில், 2016ஆம் ஆண்டு உலக இருபதுக்கு - 20 நடைபெற்றமையால், இறுதியாக நடைபெற்ற அவ்வாண்டு ஆசியக் கிண்ணம் இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டிகளாக இடம்பெற்ற நிலையில், அடுத்தாண்டு உலகக் கிண்ணம் இடம்பெறவுள்ள நிலையில், இவ்வாண்டுப் போட்டிகள் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளாக இடம்பெறுகின்றன.

இவ்வாண்டு ஆசியக் கிண்ணத்தில், ஆசிய கிரிக்கெட் சபையின் முழு அங்கத்துவ நாடுகளான இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் நேரடியாகத் தொடருக்குத் தகுதி பெற்றிருந்தன.

ஹொங்கொங், ஐக்கிய அரபு இராச்சியம், ஓமான், நேபாளம், மலேசியா, சிங்கப்பூர் ஆகியவற்றுடன் தகுதிகாண் தொடரில் விளையாடி அதில் சம்பியனானதன் மூலமே ஆசியக் கிண்ணத்துக்கு தகுதி பெற்றிருந்தது.

ASIA CUP
UAE 2018




கண்டி றோட்டறி கழகத்தினால் வருடாந்தம் நடத்தப்படும் ரி.ஆர்.ஆர்.ராஜன் ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுப் போட்டி இம்முறை கண்டி மாகாண விளையாட்டு மைதானத்தில் கடந்த 8 ஆம் திகதி நடைபெற்றது. றோட்டறி மாவட்டம் - 3220, இலங்கை மற்றும் மாலைதீவு நாடுகளிலிருந்து 60 இற்கு மேற்பட்ட றோட்டறிக் கழகங்கள் இந்தச் சுற்றுப் போட்டியில் கலந்து கொண்டன. 2018ஆம் ஆண்டுக்கான ரி.ஆர்.ஆர்.ராஜன் சம்பியன் கிண்ணத்தை ஐ.சி.பிரதீப்குமரன் தலைமையிலான நல்லூர் றோட்டறி அணி பெற்றுக் கொண்டது. வட மாகாண றோட்டறி வரலாற்றில் முதல் தடவையாக றோட்டறிக் கழகம் பெற்றுக் கொண்ட வெற்றியாகும்.

# மடுத் திருத்தலம் குறித்து விசேட கலந்துரையாடல்

மடுத் திருத்தலப் பகுதியைப் புனித பிரதேசமாகப் பிரகடனப்படுத்துவது தொடர்பில் விசேட கலந்துரையாடல் நேற்றுக் காலை மடுப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் 20 இற்கும் மேற்பட்ட அமைச்சுக்களின் செயலாளர்கள், ஜனாதிபதி செயலக அதிகாரிகள், பிரதமர் அலுவலக அதிகாரிகள், மன்னார் மாவட்ட செயலாளர், வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் உட்பட பல திணைக்களக்களைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

அத்துடன், மன்னார் மறைமாவட்ட ஆயருக்குப் பதிலாக மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை, மடுப் பரிபாலகர் அருட்தந்தை பெப்பி



சோசை ஆகியோர் கலந்து கொண்டனர்.

மடுத் திருத்தலப் பகுதியைப் புனித பிரதேசமாகப் பிரகடனப்படுத்துவது தொடர்பில் அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்த நிலையில் ஆரம்ப கட்டக் கூட்டம் கடந்த மாதம் 31 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றிருந்தது. (ஐ)

# ரவி மீது நேற்று வழக்கு

முன்னாள் அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான ரவி கருணாநாயக்க மீது கொழும்பு கோட்டை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. குற்றப்புலனாய்வுப் பிரிவினர் இந்த வழக்கை நேற்றுத் தாக்கல் செய்தனர்.

மத்திய வங்கிப் பிணை முறி கொடுக்கல் வாங்கல் தொடர்பாகப் போலி ஆவணங்களை ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் சமர்ப்பித்தார் எனக் கூறியே ரவி கருணாநாயக்க மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, ரவி கருணாநாயக்கவுக்கு அமைச்சு பதவியொன்றை வழங்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ச்சியாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

ரணில் இவ்விடயத்தில் கவனம் செலுத்துவாரென எதிர்பார்த்திருந்த நிலையில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் ரவி கருணாநாயக்க மீது வழக்கு தொடர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வவுனியாவில் குண்டு மீட்பு

வவுனியா, காத்தார்சின்னகுளம் பகுதியில் நிலத்தில் புதையுண்டு கிடந்த மோட்டார் குண்டு ஒன்று நேற்று மீட்கப்பட்டது. அந்தப் பகுதியில் நீர் வடிகாலமைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்த ஊழியர்கள் மண் அள்ளும் இயந்திரத்தின் மூலம் நிலத்தைத் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டபோது சிறியரக மோட்டார் குண்டு ஒன்றை மீட்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து சம்பவம் தொடர்பாகப் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதை அடுத்து அவ்விடத்துக்கு விரைந்த பொலிஸார், குண்டைப் பரிசோதித்ததுடன் விசேட அதிரடிப் படையினருக்கும் தகவல் வழங்கினர்.

இன்று நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் குண்டு செயலிழக்க செய்யப்படவுள்ளது. (ஐ)







இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.09.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.